விலை: 30.00 viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com




சங்கு 23
ஒலி 180 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 03 வெள்ளிக்கிழமை (17.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### வடக்கில் எரிபொருளை பெறுவதற்காக

## பல கிலோ மீற்றர் தூரம் வரை மக்கள் நீண்டவரிசையில் பல மணிநேரமாக காத்திருப்பு







(யாழ்ப்பாணம்)

வடக்கின் பல பகுதிகளிலும் பெற்றோலுக்காக மக்கள் நீண்ட வரிசைகளில் பல மணி நேரமாக, பல கிலோ மீற்றர் தூரம் வரை காத்திருந்து பெற்றோலைப் பெற்றுச் சென்றனர்.

நேற்று வியாழக் 15

### எரிபொருள் தட்டுப்பாட்டால்

## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள அரசு மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் அனைத்துக்கும் இன்று விடுமுறை வழங்கப்படவுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த 15

### மீண்டும் எப்போது

## எரிபொருள் கிடைக்கும் என்று கூறமுடியாது

### எரிசக்தி அமைச்சர் காஞ்சன



*(கொழும்பு)*

**மீண்டும் நாட்டுக்கு எப்பொழுது எரிபொருள் கிடைக்கும் என்று கூறமுடியாது என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.**

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவிடமிருந்து பெற்ற கடனால் டீசலை ஏற்றிய இறுதிக் கப்பல் நாட்டை வந்தடைந்தது.

இதனை பின்னர் எரி 15

### வீட்டுத் தேவைக்காக

## எரிவாயுவை பெற வரிசையில் நிற்காதீர்

### லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு

(கொழும்பு)

வீட்டு சமையல் எரிவாயு கொள்கலன்களை பெற வரிசையில் காத்திருக்க வேண்டாம் என்று லிட்ரோ நிறுவனம் பொது மக்களை கோரியுள்ளது.

இரு நாட்களுக்கு முன் தரையிறக்கப் பட்ட எரிவாயு 15

## நாட்டில் ஆட்சி மாற்றத்துக்காக தேர்தலை நடத்த வேண்டும்

### சம்பந்தனின் கூற்றை வரவேற்ற சஜித்



(கொழும்பு)

"நாட்டில் ஆட்சி மாற்றத்தைக் கோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கருத்தை வரவேற்கின்றோம். இந்த ஆட்சி மாற்றம் மக்கள் ஆணையுடன் ஜனநாயக வழியில் இடம்பெற வேண்டும். அதற்காக ஜனாதிபதித் தேர்தலும் பாராளுமன்றத் தேர்தலும் 15

### எரிபொருள், எரிவாயுவுக்காக

## வரிசையில் காத்திருந்த இருவர் நேற்று மரணம்

(கொழும்பு)

எரிபொருள் மற்றும் எரிவாயுவிற்கான வரிசைகளில் நேற்று இரண்டு மரணங்கள் பதிவாகியுள்ளன.

பாணந்துறை வேகட பகுதியில் எரிபொருள் வரிசையில் நின்ற நபரொருவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார். 15

### இந்தியாவிடமிருந்து

## 50 ஆயிரம் மெட்ரிக்தொன் அரிசி இறக்குமதி

(கொழும்பு)

இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் 50 ஆயிரம் மெட்ரிக் 15

## வடக்கில் பெற்றோல் கிடைக்கும் இடங்கள்

(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதும் இன்று வெள்ளிக்கிழமை எரிபொருள் கிடைக்கும் இடங்கள் தொடர்பான விபரங்களை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் வெளியிட்டுள்ளது.

அந்தவகையில் 92 ஒக்ரேன் பெற்றோல் யாழ். மாவட்டத்தில் கோப்பாய், திருநெல்வேலி, வல்வெட்டித்துறை ஆகிய பிரதேசங்களிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற 15

## எவ்வித கொடுப்பனவும் இன்றி பணியாற்ற

### யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் எவ்வித கொடுப்பனவும் இல்லாமல் பணியாற்றுவது தொடர்பில் எடுத்துக்காட்டும் விசேட தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# துன்னாலையில் கொள்ளை நால்வர் பொலிஸாரால் கைது

(பருத்தித்துறை )

பருத்தித்துறை துன்னாலை மடத்தடியில் நள்ளிரவு வேளை வீடுடைத்து உள்நுழைந்து அங்கிருந்த 6 பேருக்கு பெருங்காயங்களை ஏற்படுத்தி 12 தங்கப் பவுண் நகைகளைக் கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய நால்வர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.



சந்தேக நபர்கள் கொள்ளையிட்ட நகைகளில் ஐந்தரைப் பவுண் நகைகள் கைப்பற்றப்பட்டதோடு அவற்றை உடமையில் வைத்திருந்த பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் பயன்படுத்திய வாள்களும் கைப்பற்றப்பட்டன.

மேலதிக நடவடிக்கைகளுக்காக சந்தேக நபர்கள் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

(ம-07.33)

# காங்கேசன்துறை துறைமுகம் மூலம் இறக்குமதிக்கு அனுமதி வழங்கினால்

## ஒரே இரவில் பிரச்சினைக்குத் தீர்வு அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

எரிபொருள், சீமெந்து, உரம் மற்றும் அத்தியாவசிய பொருட்களை இந்தியாவிலிருந்து காங்கேசன்துறை துறைமுகம் வழியாக இறக்குமதி செய்யும் திட்டத்திற்கு அனுமதித்தால் ஒரு இரவிலேயே தீர்வு என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்..

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடற்தொழிலாளர்கள், விவசாயிகள், போக்குவரத்து உள்ளிட்ட சங்கங்கள் இணைந்து எரிபொருள் பெற்றுக்கொள்வது தொடர்பில் கேட்டுள்ளார்கள். உரப் பற்றாக்குறை மற்றும் எரிபொருள் பற்றாக் குறை அதேபோன்று அத்தியாவசிய பொருட்களினுடைய பற்றாக்குறை நாடு தழுவிய ரீதியில் ஏற்பட்டுள்ள அதே நேரத்தில் வடமாகாணமும் விதிவிலக்கில்லாமல் அதற்கு முகம்கொடுத்து வருகின்றது.

இந்த வகையில் எங்களது நீண்டகால திட்ட முன்மொழிவாக இந்தியாவிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்வதாகும். பாண்டிச்சேரி, காரைக்கால் அல்லது நாகபட்டணத்திலிருந்து நேரடியாக காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்குமதி செய்வதன் ஊடாக விரைவாகவும், நியாயமான முறையில் எமது மக்களிற்கு கிடைக்கக்கூடிய சூழலை உருவாக்குவோம்.

எரிபொருள், உரம், சீமெந்து மற்றும் அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறை ஆகியவற்றை நீக்கி வெகு விரைவில் மக்களிற்கு அதைக் கிடைக்கச் செய்வோம் என தெரிவித்தார்.

(ம-7)


## கொக்குவில் - நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

### வழிபடுவோர் மகாசபைக் கூட்டம் - அழைப்பிதழ்

இடம் - மனோன்மணி திருமண மண்டபம்
காலம் - 18.06.2022 சனிக்கிழமை
நேரம் - மாலை 4.00 மணி

மேற்படி மகாசபைக் கூட்டத்தில் புதிய தர்மகர்த்தாக்களும் பரிபாலன சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவர். மகாசபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.

(11999)

பரிபாலன சபையினர்


# சைக்கிள்களுக்கு புதிய காப்பீட்டு திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

காப்புறுதி நிறுவனங்கள் சைக்கிள்களுக்கு புதிய காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளன.

எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் தட்டுப்பாட்டால் தற்போது சைக்கிள்களுக்கான தேவை அதிகரித்து வரும் நிலையில், இரண்டு வருட காலத்திற்குள் வாங்கும் சைக்கிள்களுக்கு இந்தக் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

விபத்து ஏற்பட்டால் ரூ.ஒரு இலட்சமும், விபத்தில் சைக்கிள் முற்றாகச் சேதமடைந்தால், அந்த சைக்கிளின் முழு மதிப்பையும் காப்பீட்டு நிறுவனத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


## Invitation for Bids (IFB)

Municipal Council - Jaffna
Security Service for Municipal Council Jaffna
JMC/PO1/MA/Sec.Ser/2022

1. The Chairman Regional Procurement Committee (RPC) on behalf of the Municipal Council Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for Security Service of Municipal Council Jaffna.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the following requirements;
   a. Bidders shall have valid business registration
   b.and approval of the Ministry of Defense to provide security service
4. To be eligible for entering into an agreement and to become the contract effective the bidder shall meet following requirement.
   a. Shall have its registered office or branch in Northern Province
5. To qualify for award of the Contract, bidders shall meet the minimum qualifying criteria if given in Section 2 Bidding Data.
6. Interested bidders may obtain further information from Municipal Council Jaffna, Point Pedro Road, Nallur, Jaffna and inspect the bidding documents at Municipal Council Jaffna from 9.00 hrs to 15.00 hrs on working days.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Commissioner, Municipal Council,Jaffna from 17th June 2022 to 30th June 2022 from 09.00 hrs to 15.00 hrs upon payment of a non-refundable fee of Rs.1,000.00 .The method of payment will be cash.
8. Bids shall be delivered to Municipal Council , Jaffna, Point Pedro Road, Nallur,Jaffna on or before 15.00 hrs on 04th July 2022. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. All bids shall be accompanied by a Bid-Security of Rs. 200,000.00

**Hon.Mayor.V.Manivannan.**
**Chairman, Procurement Committee,**
**Municipal Council, Jaffna,**
**Point Pedro Road,Nallur,**
**Jaffna.**

Date:17.06.2022

(C-4504)



## 31 ஆம் நாள் நினைவுதினமும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 1962 . 08 . 14



மறைவு 2022 . 05 . 18

கடந்த 18.05.2022 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர் **மினாசி இன்பராசா**

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (17.06.2022) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ஆச்சியடி லேன்,
கோப்பாய் தெற்கு.

(11897)

இங்ஙனம்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3500 பேக்கரிகள் மூடப்பட்டுள்ளதால்
# 2 இலட்சம் தொழிலாளர்கள் வேலையிழப்பு

**(கொழும்பு)**

**நாட்டில் உள்ள சுமார் 3500 பேக்கரிகள் தற்போது மூடப்பட்டுள்ளன. பேக்கரி உற் பத்தி தொழிலுடன், நேரடி யாகவும் மறைமுகமாகவும் வேலை பார்த்து வந்த சுமார் இரண்டு இலட்சம் பேர் வேலையை இழந்துள்ளனர் என இலங்கை பேக்கரி உரிமையா ளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.**

(கொழும்பு)

பேக்கரி உற்பத்திகளின் விற்பனை சடுதியாக குறை வடைந்துள்ளதால் எதிர்கா லத்தில் அவற்றின் விலையில் ஏற்படும் உயர்வினை தடுக்க முடியாது எனஅவர் தெரிவித்து ள்ளார்.

நாட்டில் தற்போது, பாண் மற்றும் பணிஸ் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருட் களை மக்கள் பெற்றுக்கொள் வது குறைந்துவிட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் உள்ள சுமார் 3500 பேக்கரிகள் தற்போது மூடப்பட்டுள்ளன. பேக்கரி உற் பத்தி தொழிலுடன், நேரடி யாகவும் மறைமுகமாகவும் வேலை பார்த்து வந்த சுமார் இரண்டு இலட்சம் பேர் வேலையை இழந்துள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

எரிவாயு, டீசல், மண் ணெண்ணெய் தட்டுப்பாடு காரணமாக பேக்கரி தொழிலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், 50 சதவீத பேக்கரிகள் செயற் படாமல் உள்ளன.

பேக்கரி பொருட்களின் விற் பனையும் சரிவடைந்துள்ள தால், எதிர்காலத்தில் பணிஸ் ஒன்றின் விலை ரூ.100 ஆக உயரும் என்பது தவிர்க்க முடி யாது எனவும் அவர் தெரி வித்தார். (நி-6)

## தேங்காய் பறித்த நபர் மீது துப்பாக்கிப் பிரயோகம்

(கொழும்பு)

நீர்கொழும்பு, கொச்சிக்கடை - ஏத்கால - கேரம் தோட்டப் பகுதியில் அனுமதியின்றி தேங்காய் பறித்த நபரொருவர் மீது காணி உரிமையாளர் துப் பாக்கிப்பிரயோகம் மேற் கொண் டதில், குறித்த நபர் உயிரிழந்து ள்ளார்.

சம்பவத்தில் படுகாயம டைந்த நபர் நீர்கொழும்பு மாவ ட்ட மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்ட நிலையிலேயே சிகிச்சைப் பலனின்றி உயிரி ழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட குறித்த சந்தேகநபர் துப்பாக்கியுடன் கொச்சிக்கடை பொலிஸ் நிலை யத்தில் சரணடைந்ததையடு த்து, கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (நி-6)

## எரிபொருள் வழங்குமாறு கோரி கொழும்பில் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

எரிபொருளை வழங்குமாறு கோரி தெல்கந்த - மஹரகம சந்தியில் உள்ள ஹைலெவல் வீதியை மூடி அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்ட னர்.

இதன் காரணமாக தெல் கந்த சந்தியில் உள்ள ஹைலெ வல் வீதியின் போக்குவரத்து தடைப்பட்டது.

போக்குவரத்து நெரிசல் கார ணமாக ஹைலெவல் வீதியை பயன்படுத்தும் சாரதிகள் மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு கோரப்பட்டனர். (நி-6)

## பிள்ளையை ஆற்றில் வீசிவிட்டு தாய் தற்கொலை முயற்சி

(கொழும்பு)

வத்தளை - கதிரான பாலத் திற்கருகில் தனது பிள்ளையை களனி கங்கையில் வீசி, தாமும் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களனி கங்கையில் வீசப் பட்ட 5 வயது பிள்ளையைத் தேடும் பணிகளில் கடற்படை யினர் ஈடுபட்டுள்ளனர்.

வத்தளை - ஹெந்தல பகு தியைச் சேர்ந்த 42 வயதான தாயொருவரே சம்பவம் தொடர் பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் ஆர ம்பிக்கப்பட்டுள்ளன. (நி-6)

## விடைத்தாள் திருத்தப் பணிகளின் கட்டணத்தில் திருத்தம்

### பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

அண்மையில் இடம்பெற்ற கல்விப்பொதுத்தராதர சாதா ரண தரப்பரீட்சையின் விடை த்தாள் திருத்தப்பணிகளுக்காக செலுத்தப்படும் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு ள்ளது எனபரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல். எம்.டி.தர்மசேன தெரிவித் துள்ளார்.

விடைத்தாள் திருத்தப் பணிகளை மேற்கொள்ளும் குழுக்களுக்கு, ஒரு விடை த்தாள் திருத்தப்பணிகளுக்காக செலுத்தப்படும் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ள தீர் மானம் மேற்கொள்ளப்பட்டு ள்ளதாக அவர் குறிப்பிட்டுள் ளார்.

அத்துடன் நிலவும் எரி பொருள் மற்றும் போக்குவரத்து நெருக்கடியை கருத்திற் கொண்டு மத்திய நிலைய பணி க்குழாம் மற்றும் விடைத்தாள் பரிசோதகர்களுக்காக செலு த்தப்படும் நாளாந்த கொடுப்ப னவிலும் திருத்தத்தை மேற் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வரு வதாகவும் அவர் தெரிவித்து ள்ளார். (நி-6)

## 80 வீதமான எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பூட்டு

(கொழும்பு)

நாட்டில் 80 வீதமான எரிபொருள் நிரப்பு நிலை யங்கள் நேற்று முன்தினம் மூடப்பட்டிருந்ததாக தெரி விக்கப்படுகின்றது.

இலங்கையில் மொத் தமாக 1190 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் காண ப்படுவதாகவும், இதில் 250 இந்திய எண்ணெய் நிறு வனத்திற்கு சொந்தமா னவை எனவும் தெரிவிக்க ப்படுகின்றது.

பணம் செலுத்தப்பட்டால் மாத்திரமே எரிபொருள் விநியோகம் செய்வது என்ற நடைமுறையை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தா பனம் பின்பற்றத் தொடங்கி யுள்ளது. இதனால் பெரும் எண்ணிக்கையிலான எரி பொருள் நிரப்பு நிலையங் களினால் எரிபொருள் கொள் வனவு செய்ய முடிய வில்லை என தெரிவிக்கப்ப டுகின்றது.

பெற்றோல், டீசல் என்பன வற்றை கொள்வனவு செய்ய வேண்டுமாயின் 50 இலட் சம் ரூபா வரையில் தேவைப்படும் எனவும் அவ் வாறு பணம் செலுத்தினா லும் உடனடியாக எரி பொருளை பெற்றுக்கொள்ள முடிவதில்லை எனவும் எரி பொருள் விநியோக சங்கத் தின் தலைவர் ஷெல்டன் பெர்னாண்டோ தெரிவித்து ள்ளார். (நி-6)

## கைக்குண்டு மீட்பு நீர்கொழும்பில் பதட்டம்

(கொழும்பு)

நீர்கொழும்பு கட்டுவாப் பிட்டிய தேவாலயத்திற்கு அரு காமையில் உள்ள பாதை யொன்றுக்கு அருகில் இருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப் பட்டுள்ளது.

சந்தேகத்திற்கிடமான பொதி யொன்று காணப்பட்டதைத் தொடர்ந்து, குறித்த பொதியில் கைக்குண்டு இருப்பது கண்ட றியப்பட்டுள்ளது.

கைக்குண்டு கண்டுபிடிக் கப்பட்ட இடத்திலிருந்து மிக அருகாமையிலேயே நீர்கொழு ம்பு மேயரின் வீடு அமைந் துள்ளமை குறிப்பிடத்தக்க து. (நி-6)

## எரிபொருளுடன் இறுதிக்கப்பல் நாட்டை வந்தடைந்தது



(கொழும்பு)

இந்தியாவிடம் இருந்து பெற் றுக்கொண்ட 700 மில்லியன் கடன் வசதியின் கீழ் கிடைக்கும் டீசலை ஏற்றிய இறுதிக் கப்பல் கொழும்பை வந்தடைந்து ள்ளது.

இதன்மூலம் 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் கிடைத்து ள்ளது.

எவ்வாறா யினும், குறி த்த கப்பலிலு ள்ள டீசலை விநியோகம் செய் வதற்கு இன்னும் 3 நாட்கள் செல்லும் என இலங்கை பெற் றோலிய கூட்டுத்தாபனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரி வித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணி கப்டனாக ஹர்த்திக் பாண்ட்யா

அயர்லாந்து அணிக்கு எதிரான தொடரில் ஹர்திக் பாண்ட்யா கப்டனாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாட உள்ளது. ஒரு டெஸ்ட், மூன்று இருபது-20 மற்றும் மூன்று ஒரு நாள் போட்டிகளில் இந்திய அணி விளையாட உள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான பயிற்சி ஆட்டம் ஜூன் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கு முன்பாக, ஜூன் 26, 28 திகதிகளில் அயர்லாந்து அணியுடன் இரண்டு இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் இந்திய அணி பங்கேற்க உள்ளது.

இந்த தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் ஐ.பி.எல் தொடரில் சிறப்பாக கப்டன்சி செய்த ஆல்ரவுண்டர் வீரர் ஹர்திக் பாண்ட்யா தலைமை ஏற்று விளையாட உள்ளார். துணை கப்டனாக வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தென் ஆபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது இருபது-20 போட்டியில் புவனேஷ்வர் குமார் 13 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தி மிரட்டிருந்தார். அயர்லாந்து அணிக்கு எதிரான தொடரில் ஐ.பி.எல் தொடரில் வேகப்பந்து வீச்சில் மிரட்டிய உம்ரான் மாலிக் இடம் பெற்றுள்ளார்.

இந்திய அணி விபரம்: ஹர்திக் பாண்ட்யா (கப்டன்), புவனேஷ்வர் குமார் (துணை கப்டன்), இஷான் கிஷண், ருதுராஜ் கெய்க்வாட், சஞ்சு சாம்சன், சூர்யகுமார் யாதவ், வெங்கடேஷ் ஐயர், தீபக் ஹூடா, ராகுல் திரிபாதி, தினேஷ் கார்த்திக் (விக்கெட் கீப்பர்), யுஸ்வேந்திர சஹால், அக்சர் பட்டேல், ரவி பிஸ்னாய், ஹர்ஷல்பட்டேல், ஆவேஷ்கான், அர் ஷ்தீப் சிங், உம்ரான் மாலிக். (4)

# ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசை ஜடேஜா முதலிடம்




ஐ.சி.சி .வெளியிட்டுள்ள சிறந்த டெஸ்ட் வீரர்கள் பட்டியலில் தமிழக வீரர் அஸ்வின் இரண்டாம் இடம் பிடித்துள்ளார்.

2022ஆம் ஆண்டுக்கான சிறந்த டெஸ்ட் வீரர்கள் பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது. இந்தப் பட்டியலில் இரண்டு இந்திய வீரர்கள் முதல் 2 இடங்களை பிடித்துள்ளனர். ரவீந்திர ஜடேஜா 385 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்துள்ளார். தமிழக வீரர் ரவிச் சந்திரன் அஸ்வின் 341 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். மேற்கிந்திய தீவுகளின் ஜேசன் ஹோல்டர்(336) 3வது இடத்தையும், ஷகிப் அல் ஹசன்(327) 4வது இடத்தையும் பிடித்துள்ளனர்.

5வது இடத்தில் 307 புள்ளிகளுடன் இங்கிலாந்து கப்டன் பென் ஸ்டோக்ஸ் உள்ளார். அவுஸ்திரேலிய வீரர்கள் மிட்செல் ஸ்டார்க்(291), பேட் கம்மின்ஸ்(263) முறையே 6 மற்றும் 7வது இடங்களில் உள்ளனர். நியூசிலாந்து வீரர் கிராண்ட்ஹோம் (243), இங்கிலாந்து வீரர் கிறிஸ் வோக்ஸ்(230), நியூசிலாந்து வீரர் ஜேமிஸன் (226) ஆகியோர் 8,9,10 இடங்களில் உள்ளனர். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2640

### ரஞ்சன்

படுத்துக் கிடப்பவனுக்கு பகல் கூட இரவு தான் எழுந்து உழைப்பவனுக்கு திசையெல்லாம் கிழக்குத்தான்



### விது

என்னடா இப்பதாண்டா 100% சார்ஜர் போட்டேன் அதுக்குள்ள 20% வந்துட்ட பின்ன நீ நோண்ட்ற நோண்டுக்கு மூனு நாளைக்கு சார்ஜ் தாங்குமா போய் சார்ஜர் போட்றா





### சிந்துஜன்

கனவுகள் மெய்ப்பட கடினமாய் உழை... காட்சிகள் கண்ணில் பிம்பங்களாய் தோன்றினாலும் ... நீ நினைத்தால் ஒருநாள் நிழலும் நிச்சயமாகும்...!!!




### கோபிகா

வாழைப்பழம் எவ்வளவு? அஞ்சு ரூபாய் மூனு ரூபாய்க்கு வராதா? மூனு ரூபாய்க்கு தோல் தான் வரும் இந்தா ரெண்டு ரூபாய் தோல வச்சிக்கிட்டு பழத்த கொடு



### தணிகன்



### சர்மிகா

போன்ல நெட்டும், மனசுல லவ்வும் இல்லாதவங்க



நைட்ல நல்லா தூங்குவாங்க

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்வெட்டு மணித்தியாலங்கள் மேலும் அதிகரிப்பு?

**(கொழும்பு)**

**தற்போதைய மின்வெட்டு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் சுமார் ஒன்றரை மணிநேரத்தினால் நீடிக்க வேண்டியேற்படும் என மின் பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.**

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் 300 மெகாவோல்ட் மின்சாரம் இன்று முதல் தேசிய மின்கட்டமைப்பிற்கு கிடைக்காது போகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய திருத்தப்பணிகளால் நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் இரண்டாம் மின்பிறப்பாக்கியின் தொழிற்பாடுகள் நிறுத்தப்படவுள்ளமையே இதற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திருத்தப்பணிகள் இரண்டு மாதங்கள் இடம்பெறும் என இலங்கை மின்சார சபையின் ஊடக பேச்சாளர் அன்ரூ நவமணி தெரிவித்துள்ளார். ( நி-6)

## வேகமாகப் பரவுகிறது இன்புளுவென்சா தொற்று

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்தில் இன்புளுவென்சா வைரஸ் தொற்று நோய் மிக வேகமாகப் பரவி வருகின்றது. கலவானை பிரதேசத்தை அண்மித்து இந்த இன்புளுவென்சா நோய் வேகமாகப் பரவி வருவதாக சப்ரகமுவ மாகாண சுகாதார சேவை மருத்துவ பணிப்பாளர் மருத்துவர் கபில கன்னாங்கர தெரிவித்துள்ளார். அத்துடன் ஏப்ரல் மாதத்தில் 11 நோயாளர்களும் மே மாதத்தில் 6 நோயாளர்களும் ஜூன் மாதத்தில் 103 நோயாளர்களும் பதிவாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-6)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர்.திருமதி.விஜிதா ரவிச்சந்திரன்



பிறப்பு: 22.03.1973
இறப்பு: 27.06.2021

கடந்த 27.06.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி

அமரர்.திருமதி.விஜிதா ரவிச்சந்திரன்

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை 17.06.2022 இன்று வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெறும்.


அன்பின் உருவமே
அழியாத பேரன்பே
எம்மை விட்டுப் பிரிந்ததேனோ?
ஜென்மம் மீண்டொன்றுண்டெனில்
மீண்டும் எம்முறவாய் வந்துதி
உன் அன்புக்காக
ஏங்கியபடி நாமிங்கு...

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

அன்பு அப்பா, சகோதரர்கள்,
கணவன், பிள்ளை.

(சி-4501)

## 45ம் நாள் நினைவஞ்சலி



அமரர்.
### கணபதி தவராசா (செல்வம்)

மண்ணில் 20.11.1956
விண்ணில் 04.05.2022

எம் மனங்களில் நிறைந்து
நின்ற உடன்பிறப்பே நீங்கள்
இருந்த இடமெல்லாம்
வெறிச்சோடி இருக்குதே அதைப்
பார்க்கும் போது எங்கள் நெஞ்சு
வெடித்து பதறுதே உன் அன்பை
எங்கள் மனதிலே பரவ விட்டு
விண்ணிலே மறைந்தீர்
எங்கள் விழிகளை கலங்க
விட்டே கண்ணீர் பூக்களால்
காணிக்கையாக்குகிறோம்.

**என்றும் உங்கள் பிரிவால் துயருறும்**

கலாசாலை றோட்,
திருநெல்வேலி வடக்கு. (1992)

சகோதரர்கள், மைத்துனர்மார்,
மருமக்கள், பெறா மக்கள்.

## 10 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்.திருமதி.
### சிவயோகம் செல்வராசா
(இளைப்பாறிய ஆசிரியை)

திதி–17.6.2022 சதுர்த்தி

தோற்றம் 31.10.1928
மறைவு 07.06.2012

அம்மா என்று அழைக்காத
உயிர் இல்லையே
அம்மாவை வணங்காது
உயர்வில்லையே

**என்றும் உங்கள் நினைவுடன் வாழும்**

“சுபசதனம்”
செம்பியன் லேன்,
கொக்குவில்.

பேராசிரியர் மா.சின்னத்தம்பி
மக்கள், மருமக்கள்,
பேரப் பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(11883)

## இராசிபலன்

17.06.2022
ஆனி 03, வெள்ளிக்கிழமை
திருதியை முற்பகல் 10.41 மணிவரை

உத்தராடம் பிற்பகல் 2.36 மணிவரை
சுபநேரம் 5.53-7.23 மணிவரை
இராகுகாலம் 10.23-11.53 மணிவரை

சங்கடகர சதுர்த்தி விரதம்
சந்திராஷ்டமம் -மிருகசீரிடம், திருவாதிரை

**வளவன்**

**மேஷம்:** கனவு பலிதமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், செய் தொழில் மேன்மையுண்டு, முயற்சிகள் கைகூடும்.

**கடகம்:** வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்:** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மகரம்:** தொழிலில் பொறுப்புக்கள் கூடும் வாய்ப்புண்டு, பெரியோரின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், உடல் நலன் சீராகும், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**ரிஷபம்:** அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் கூடும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் உண்டு.

**சிம்மம்:** இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், நோயில் இருந்து நிவாரணம் பெறுவீர்கள், இனிமையான நாள்.

**விருச்சிகம்:** நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்:** தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உறவினர்களின் நலன் கருதிய சுப விரயங்கள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, திடீர் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கன்னி:** வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், புண் ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**தனுசு:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மீனம்:** அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவத்திற்கு அஞ்சுவதை விட நற் பண்பைக் காதலி

# பல்கலை மாணவி மீது அசிட் போத்தல் என தெரிவித்து தண்ணீர் வீச முயன்றவர் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்பாக நேற்று காலை புதுமுக மாணவி ஒருவர் மீது அசிட் வீசுவதாக தண்ணீர் போத்தலை வீச முயன்ற சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது. கிளைகளைப் படத்தின் புதுமுக மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு ஆரம்பமாகி வழிப்படுத்தல் நிகழ்வு கைலாசபதி கலையரங்கில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் நிலையில் நேற்று பல்கலைக்கழகத்திற்கு வழிப்படுத்தல் நிகழ்விற்காக வருகை தந்த பல்கலைக்கழக புதுமுக மாணவி மீது அசிட் வீசப் போவதாக மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் அச்சுறுத்திக் கொண்டிருந்த நிலையில் அவ்வழியே வந்த சிரேஷ்ட மாணவர்கள் குறித்த இளைஞரை மடக்கிப் பிடித்தனர். குறித்த நபரை விசாரித்த நிலையில் அசிட் போத்தல் தண்ணீர் போத்தல் என தெரியவந்ததோடு உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த 21 வயதான இளைஞன் என தெரியவந்தது. மாணவர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு இது தொடர்பாக அறிவித்தனர். இதற்கிடையில் குறித்த இளைஞன் திடீரென வந்த மோட்டார் சைக்கிளில் ஏறி மாணவர்களின் பிடியிலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.மேலும் சம்பவ இடத்திற்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் குறித்த இளைஞனின் புகைப்படத்தையும் குறித்த இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிள் இலக்கத்தையும் பெற்றதுடன் மாணவர்களின் வாக்கு மூலத்தையும் பதிவு செய்து மேலதிக விசாரணைகளை ஆரம்பித்தனர். (4-6-104)

# திருமுறை மனனப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகம் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையை முன்னிட்டு ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கிடையில் சமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு திருமுறை மனனப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இப்போட்டிக்கு தரம் 1,2 மற்றும் முன்பள்ளி மாணவர்கள் யாவரும் பங்குபற்றலாம். முத்திநெறி அறியாத..., பூசுவதும் வெண்ணீறும்... ஆகிய இரு திருமுறைகளையும் மனனம் செய்து ஒப்புவித்தல் வேண்டும்.

இவற்றுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 25 ஆம் திகதியாகும்.

மனனப் போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல. 144 (82) நாவலர் வீதி, வண் ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 வரை தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் பரீட்சைச் செயலரும் சமயப் பிரசாரகருமான சு. சிறிகாந்தன் தெரிவித்துள்ளார். (4-6)

# வலி.கிழக்கு தவிசாளருக்கு எதிரான வழக்கு நவம்பருக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

நிலாவரையில் தொல்லியல் திணைக்களத்தின் அரச கருமங்களுக்கு தடை ஏற்படுத்தினார் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தி. நிரோஷிற்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த வருடம் தொடரப்பட்ட இவ் வழக்கில் வழக்கினை தொடர்ந்து முன்னெடுத்து செல்வதாயின் சட்டமா அதிபரின் ஆலோசனையினைப் பெறுமாறு தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் மல்லாகம் நீதிவான் திருமதி. காயத்திரி சைலவன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, அச்சுவேலி பொலிஸார் மேலதிக அறிக்கையினை சமர்ப்பித்தது டன் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் மன்றில் தெரியப்படுத்தினர். இதனைத் தொடர்ந்து எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-6)

# யாழ். - கொழும்பு விசேட புகையிரத சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்- கொழும்பு விசேட புகையிரத சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண புகையிரத நிலைய பிரதம அதிபர் தி.பிரதீபன் தெரிவித்தார். யாழ்ப்பாண புகையிரத நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்

மேலும் தெரிவிக்கையில்,. இன்று முதல் கல்கிசையில் இருந்து காங்கேசன்துறைக்கு ஒரு இரவு நகர் சேர் கடுகதி புகையிரதம் ஒன்று சேவையில் ஈடுபட உள்ளது. இது ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் கல்கிசையில் இரவு 10 மணிக்கு புறப்பட்டு அங்கிருந்து வெள்ளவத்தை பம்பலப்பிட்டி ஆகிய புகையிரத நிலையங்களில் நிறுத்தப்பட்டு அம்பலங்கோட, பொல்காவலை, குருநாகல், அநுராதபுரம், வவுனியா, கிளிநொச்சி நிலையங்களில் நிறுத்தப்பட்டு, யாழ்ப்பாணத்தை காலை 5.25க்கு வந்தடையும். பின்னர் அங்கிருந்து 5.30 க்கு புறப்பட்டு கோண்டாவில், சுன்னாகம், காங்கேசந்துறையை சென்றடையும். மீண்டும் யாழ்ப்பாணத்தில் இருந்து ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் காங்கேசன் துறையில் இருந்து இரவு 10 மணிக்கு புறப்பட்டு சுன்னாகம், கோண்டாவில் ஊடாக இரவு 10.25 மணியளவில் யாழ்ப்பாணத்தை வந்தடைந்து. 10.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு கிளிநொச்சி, வவுனியா, அநுராதபுரம், குருநாகல், கொழும்பு, கம்பஹா, மருதானை சென்றடைந்து அங்கிருந்து பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை தெஹிவளை, கல்கிசையை சென்றடையவுள்ளது.குறித்த புகையிரதத்தின் ஒரு வழி கட்டணமான நகர் சேர் கடுகதிக்குரிய கட்டணமான 2,800 ரூபா அறவிடப்படவுள்ளது. இதற்கான முன்பதிவுகள் யாழ்ப்பாண புகையிரத நிலையத்திலும் ஏனைய முன்பதிவுகளை மேற்கொள்ளக்கூடிய புகையிரத நிலையங்களிலும் நீங்கள் மேற்கொள்ளலாம் என தெரிவித்தார். (4-6-33-18)

# சிரமதானம் செய்தால் அரிசி இலவசம்

(குப்பிழான்)

யாழ்.கோப்பாய் தெற்கு பழைய வீதி தனிப்பனை வீரபத்திரர் கோயில், வைரவர் கோயில் வெளிவீதியில் நடைபெறவுள்ள சிரமதானத்தில் மூன்று மணிநேரம் தொடர்ச்சியாக ஈடுபடும் தொண்டர்களுக்குத் தலா 5 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும் எனக் கோப்பாய் சுப்பிரமுனிய கோட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது. சிரமதானத் திகதி, நேரம் பின்னர் அறிவிக்கப்படும். முன்கூட்டியே பெயர் பதிவு செய்யும் 20 தொண்டர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களுக்கு 0769775730 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-18)

## அதிபர், ஆசிரியர்களுடனான கலந்துரையாடல்

(குப்பிழான்)

அதிபர், ஆசிரியர் கடமைகளுக்குச் செல்வதற்கு எரிபொருள் இல்லாமை, எரிபொருள் கிடைக்கப் பொறிமுறைகளை உருவாக்காத அதிகாரிகளின் அக்கறையற்ற தன்மை, இத்தகைய நெருக் கடி நிலையிலும் சனி, ஞாயிறு, தினங்களில் செயலமர்வுகள் நடத்தும் அதிகாரிகளின் செயற்பாடு, விரலடையாளப் பதிவு முறை நெருக்கடி போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடி அடுத்த கட்டத் தொழிற்சங்கச் செயற்பாடுகள் குறித்த தீர்மானங்களை மேற்கொள்ளும் வகையில் வட மாகாண அதிபர், ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் ஆனைப் பந்திச் சந்தியில் அமைந்துள்ள நாவலர் கல்வி நிலையத்தில் இடம்பெற உள்ளது என இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (4-6-18)

# சாவகச்சேரியில் மூன்றாம் கட்டமாக லாப்ஸ் காஸ் விநியேகம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் மூன்றாம் கட்டமாக நேற்று வியாழக்கிழமை லாப்ஸ் காஸ் விநியோகம் இடம் பெற்றது. கடந்த தினங்களில் முற்பதிவு மேற்கொண்டவர்கள் உட்பட 250பேருக்கு இவ்வாறு மூன்றாம் கட்டமாக எரிவாயு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இது வரைதென்மராட்சியில் மூன்று கட்டங்களாக சுமார் 800 வரை யான லாப்ஸ் காஸ் விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-30)

# சாவ. மருத்துவமனையில் ஆண் தாதிக்கும் கொலை மிரட்டல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கடமையாற்றும் ஆண் தாதிய உத்தியோகத்தர் ஒருவருக்கும் தொலைபேசி வாயிலாக மிரட்டல் விடுக்கப்பட்டிருப்பதாக சாவகச்சேரி, பொலிஸ் நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை முறையிடப்பட்டுள்ளது.

மருத்துவமனையின் நிர்வாக நடவடிக்கையில் தலையிடக்கூடாது எனத் தெரிவித்தே மிரட்டல் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் குறித்த தொலைபேசி மிரட்டல் தொடர்பாக மருத்துவமனை நிர்வாகம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் குறித்த ஆண் தாதிய உத்தியோகத்தர் சுட்டிக்காட்டியிருந்தார். கடந்த மூன்று தினங்களுக்கு முன்பாக சாவகச்சேரி ஆதா ர மருத்துவமனையில் கடமையாற்றும் பெண் தாதிய உத்தியோகத்தர் ஒருவருக்கும் தொலைபேசியில் மிரட்டல் விடப்பட்டிருப்பதாக பொலிஸில் முறைப்பாடுபதிவுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-30)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மக்களுக்கு உதவியது போல் தமிழர் விடயத்திற்கும் தீர்வு காணுங்கள்

## இந்திய பிரதமர், தமிழக முதல்வரிடம் கலாநிதி. ஆறு.திருமுருகன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**இலங்கை மக்களுக்கு இந்திய அரசும் தமிழக முதல்வரும் வழங்கிய உதவிகளுக்காக இலங்கை வாழ் தமிழர்கள் சார்பில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். அதேபோல் தமிழர்களின் நீண்டகால பிரச்சினைக்குரிய நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கும் இந்திய அரசு முயற்சி எடுக்க வேண்டும் என செஞ்சொற் செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார்.**



நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மிக இக்கட்டான கால கட்டத்தில் இலங்கை வாழ் மக்கள் தவிக்கும் வேளையில் இந்தியப் பிரதமரும் தமிழ் நாட்டு முதல்வரும் அரிசி, மா போன்ற பொருட்களை அனுப்பி வைத்தமை மிகவும் நன்றிக்குரிய விடமாகும். வறுமைக்குட்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளிக்கும்வகையில் அவசர நிவாரணப் பொருள் கிடைத்துள்ளது.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பல கோடி ரூபாய் செலவில் இப்பொருட்களை அன்பளிப்பாக வழங்க முன்வந்த போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அதற்கான அனுமதியை வழங்கி எமது மக்கள் மீது அக்கறை கொண்டுள்ளமை பாராட்டுக்குரியது.

குறிப்பாக வடக்கில் உள்ள யாழ்.போதனா மருத்துவமனைக்கு அவசர மருந்துத் தேவைகளின் ஒரு பகுதியை இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் வழங்கியுள்ளமை மெச்சத்தக்க விடயமாகும்.

மேலும் பாரதிய ஜனதா கட்சியின் தமிழகத் தலைவர் கு.அண்ணாமலை யாழ்ப்பாணத்திற்கு நேரில் வருகை தந்து பல தரப்பினரையும் சந்தித்தமை சிறப்புக்குரியது. குறிப்பாக மருத்துவ உதவியோடு பலரது வேண்டுதலாக உள்ள பலாலி இந்திய விமான சேவை, கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ள செய்தி வர வேற்கத்தக்கதாகும். இந்தியப் பிரதமரும் தமிழகத் தமிழர் கட்சிகளும் இலங்கைத் தமிழர்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

கடந்த காலங்களில் குறிப்பாக வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்த காலத்தில் எமது மக்களுக்காக இந்திய அரசு, தமிழக அரசு நீதியான தீர்வை உருவாக்கவில்லை என்ற கவலை மக்கள் மனதில் நீடித்திருந்த நிலையிலும் தற்போது இந்திய அரசும் தமிழக அரசும் இலங்கை விவகாரத்தில் அக்கறை செலுத்தத் தொடங்கியிருப்பது வர வேற்கத்தக்கது.

மேலும் இந்நாட்டு மக்கள் போரினால் பட்ட துன்பத்திற்கு மேலாக இன்றைய பொருளாதார பிரச்சினையால் மேலும் துன்பப்படுவதை அனைத்துலகமும் அறியும்.

எனவே வல்லமையும் வலிமையும் மிக்க பொருளாதார கட்டமைப்பைக் கொண்ட இந்திய தேசம் தனது உற்ற உறவுத் தொடர்புடைய இலங்கையை அழிவிலிருந்து காப்பாற்றி சத்திய வழியில்நின்று தொடர்ந்து உதவ வேண்டும் என தெரிவித்தார். (நி-4-6)

# வெள்ளிக்கிழமை விடுமுறை; சுற்றறிக்கை வெளியானது

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்குவதற்கான அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் புதிய சுற்றறிக்கையை பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ளார்.

இந்த திட்டத்தில் சுகாதாரம், மின்சாரம் மற்றும் எரிசக்தி, கல்வி, பாதுகாப்பு மற்றும் பிற அத்தியாவசிய சேவைகள் இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரச ஊழியர்கள் வீடுகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட அவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் குறித்த அரச நிறுவனம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு நீதித்துறை நடவடிக்கைகள் தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழுவே தீர்மானிக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(நி-6)

## தரம் ஒன்று மாணவர்களுக்கான விண்ணப்பப்படிவம் வெளியீடு

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டுக்கான தரம் ஒன்று மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது. (நி-6)

## மீண்டும் எப்போது எரிபொருள் கிடைக்குமென தெரியாது

### எரிசக்தி அமைச்சர்

(கொழும்பு)

இதுவரை எரிபொருள் நிறுவனங்களுக்கு 735 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்த வேண்டியுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தியாவிடமிருந்து 500 மில்லியன் டொலர் பெற்றுக்கொள்வது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு, மீண்டும் நாட்டுக்கு எரிபொருள் கிடைக்கும் திகதி தொடர்பில் தற்போது சரியாக குறிப்பிட முடியாதுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: சூரி 6 செவ் 11 இல்<br>உயரம்:6'<br>தகைமை/ தொழில்:O/L (வியாபாரம்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் பதிவுத் திருமணத்துடன் விவாகரத்தானவர்.<br>தொ.இ: B/12735 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>கி.பா: 17 ¼ சூரி 6 செவ் 7 இல்<br>உயரம்: 160 cm<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு அல்லது அரச தொழில்<br>தொ.இ:G/12732 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 4<br>உயரம்:171 cm<br>தகைமை/தொழில்: A/L கிராம சேவையாளர்<br>எதிர்பார்ப்பு:உத்தியோகம் அல்லது படித்த பெண் உள்நாடு மட்டும் சைவபோசனம்<br>தொ.இ: B/12736 | பிறப்பு:1995 இந்து<br>நட்சத்திரம்: அஸ்வினி 3<br>கி.பா: சூரி 8 செவ் 9 இல்<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்:BBA .வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு:உயர்பதவி உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/12737 |
| பிறப்பு: 1983 கிறிஸ்தவம் RC<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: A/L கணிதப் பிரிவு (தனியார் கம்பனி முகாமையாளர்)<br>எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12740 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: சூரி 8 செவ் 7இல்<br>உயரம் : 160 cm<br>தகைமை/தொழில்:A/L சமுர்த்தி வங்கி<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/12738 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம் : அச்சுவினி 2<br>கி.பா:12 ¼ சூரி 11 செவ் 3 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BBA பட்டதாரி கணக்காளர் தனியார்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அல்லது அரச உத்தியோகம்<br>தொ.இ: B/12741 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்:அத்தம் 1<br>கி.பா: சூரி 10 செவ் 12 இல்<br>உயரம் :5'8"<br>தகைமை/ தொழில்:பட்டதாரி (கனடா)<br>எதிர்பார்ப்பு: படித்த தொழில்புரிபவர் விவாகரத்தானவர்<br>தொ.இ:G/12739 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1566 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 73

## நன்றி என்ற சொல்லை மனிதன் நாயிடம் கற்றுக்கொள்ள வேண்டும்



1923 ஆம் ஆண்டு யப்பானில் நடந்த உயிரையும் உள்ளங்களையும் உலுக்கும் உண்மைக்கதை ஒன்று. ரயில் நிலையம் ஒன்றில் தனியாக நின்று கொண்டிருந்த நாயொன்றை பேராசிரியர் யுனோ எடுத்து வளர்த்துள்ளார். அதற்கு ஹச்சிகோ என்று பெயரிட்டார்.

ஹச்சிக்கோ அந்த பேராசிரியர் மீது அளவற்ற பிரியம் வைத்திருந்தது. ஒவ்வொரு நாளும் காலையில் பேராசிரியருடன் ரயில் நிலையம் வரை சென்று வழியனுப்பி வைக்கும் ஹச்சிக்கோ

10 மணித்தியாலம் கழித்து அவர் திரும்பும் வரை இந்த நாயும் நாளாந்தம் ரயில் நிலையத்திலேயே காத்திருந்து அவர் வந்ததும் அவருடனேயே வீடு செல்லும். பேராசிரியர் மீது அளவு கடந்த பிரியம் வைத்திருந்த ஹச்சிக்கோ பேராசிரியர் வீட்டின் வேலைகளை அவருடன் சேர்ந்து தானும் செய்து மகிழும். அவர் பூந்தோட்டத்திற்கு தண்ணீர் ஊற்றினால் அதற்கு தானும் உதவி செய்யும்.

அவர் வீட்டைப் பெருக்கி சுத்தம் செய்தால் குப்பைக் கூடையை எடுத்து வந்து கொடுத்து உதவும். வீட்டிற்கு வரும் விருந்தினர்கள் யார்? திருடர்கள் யார்? என்பதைக்கூட புரிந்து கொண்டு நடக்கும் சாமர்த்தியம் கொண்டது ஹச்சிக்கோ.

அதனால் பேராசிரியருக்கும் ஹச்சிக்கோ மீது அளவற்ற பிரியம் இருந்தது. ஒருநாள் பேராசிரியர் கடையில் பொருட்களை வாங்கிக் கொண்டு வீடு நோக்கி நடந்து சென்று கொண்டிருக்கும் போது பின்னால் வந்த வாகனம் அவர் மீது மோத வருவதை உணர்ந்த ஹச்சிக்கோ சடுதியாக அவரின் சட்டையை தனது வாயினால் பிடித்து இழுத்து அவரை அந்த விபத்தில் இருந்து காப்பாற்றியது.

ஹச்சிக்கோ மட்டும் அவ்வாறு செய்திராதிருந்தால் பேராசிரியர் அன்று இறந்திருக்கக்கூடும். அவ்வளவுக்கு அந்த விபத்து மிகத் கொடுமையாக நிகழ்ந்திருந்தது.

அதில் பேராசிரியருக்கு எந்த காயமும் ஏற்படவில்லையாயினும் ஹக்சிக்கு காலில் காயம் ஏற்பட்டு இருந்தது. துடித்துக் போன பேராசிரியர் ஹச்சியை மருத்துவமனைக்கு கொண்டு சென்று மருந்து கட்டி வீட்டிற்கு கொண்டு வந்து மிக அவதானமாக அதைப் பராமரித்து மீண்டும் சுமுக நிலைக்கு ஹக்சி திரும்ப வைத்தார்.


அந்த அன்பு, புரிதலே ஆறறிவு ஜீவனுக்கும் ஐந்தறிகு ஜீவனிற்கும் இடையில் இவ்வளவு பிணைப்பை ஏற்படுத்தி விட்டது.

ஒருநாள் பேராசிரியருடன் ரயில் நிலையம் சென்ற ஹச்சிக்கோ தனது எஜமானனை வழியனுப்பி விட்டு ரயில் நிலையத்திலேயே அவருக்காக காத்திருந்தது. பேராசிரியர் யுனோ திரும்பி வரவே இல்லை. அவருக்குத் திடீரென ஏற்பட்ட உடல் நலக்குறைவால் இறந்துவிட்டார். ஆனால், அதையறியாத ஹச்சிக்கோ தனது எஜமான் தன்னிடம் திரும்பி வருவார், வருவார் என ரயில் நிலையத்தில் காத்திருந்தது. ஒருநாள் இரண்டு நாள் அல்ல! 10 ஆண்டுகளாக காத்திருந்தது. ஆனால் அவர் கடைசி வரை வரவே இல்லை!

வருவோர், போவோர் இந்த நாயை அனுதாபத்தோடும் பரிதாபத்தோடும் பார்த்து வந்தனர். ஒருநாள் தனது எஜமானனை எதிர்பார்த்தபடியே ஹச்சிக்கோ இறந்து போனது. இந்த விடயம் ஊடகங்கள் மூலம் ஜப்பான் முழுதும் பரவியது. நாயின் கதையைக் கேட்ட ஜப்பானியர்கள் கண்கலங்கியதுடன், அந்த ரயில் நிலைய வாயிலில் ஹச்சிக்கோவின் சிலை ஒன்றையும் நிறுவினர்.

ஜப்பானில் உள்ள குறித்த ரயில் நிலையத்தில் இந்த நாயின் சிலை வடிவமைக்கப்பட்டு, ஞாபகார்த்த சின்னமாக வைக்கப்பட்டுள்ளது.


விசுவாசம் என்பது மலைகளை விட கனமானது. கயிறுகளை விட நீளமானது. நன்றி என்ற சொல்லை மனிதன் நாயிடமிருந்து தான் கற்றுக் கொள்ள வேண்டும்.



Jeyamohan Inuvil

## பொருளாதார நெருக்கடி தேநீர் அருந்துவதை குறையுங்கள்

### பாகிஸ்தான் அரசு கோரிக்கை



(இஸ்லாமாபாத்)

அருந்தும் தேநீரின் அளவை குறைத்துக்கொள்ளுமாறு பாகிஸ்தான் அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் பொருளாதார நிலைமையை கருத்திற்கொண்டு, அந்நாட்டு அரசாங்கத்தினால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (நி-6)

## போர் நி

## கூடிய வ

(மொஸ்கோ)

போர் நிறுத்தம்

இருப்பதாக அந்த

பட்ருஷேவ் தெரிவி

உக்ரைன் ரஷ்யா போரானது முடிவில்லாத தன்மையில் 100 நாட்களை கடந்து தொடர்ந்து நடைபெற்று வரும் சூழலில், உக்ரைனில் கிழக்கு பகுதியான டான்பாஸை முழுமையாக கைப்பற்றி விட வேண்டும் என்ற நோக்கில் ரஷ்ய படைகள் தீவிர தாக்குதல் நடத்தி வருகின்றன.

அதிலும் டான்பாஸை முழுவதுமாக கைப்பற்றும் ரஷ்ய வீரர்களின்

### ரஷ்ய முற்றுகைக்குள் சிக்கியுள்ள உக்ரைனியர்கள்

## உணவு தண்ணீரின்றி பரிதவிப்பு

### ஐ.நா கவலை



(ஜெனிவா)

உக்ரைன் - சீவிரோடோனெட்ஸ்க் நகரம் ரஷ்யப் படைகளால் முற்றுகையிடப்பட்டுள்ள நிலையில் அங்கு சிக்கியுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் உணவு, தண்ணீர், சுகாதார வசதி உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளைப் பெற முடியாது அந்தரிப்பதாக ஐக்கிய நாடுகள் சபை கவலை வெளியிட்டுள்ளது.

சீவிரோடோனெட்ஸ்க் நகரத்தில் இருந்து வெளியேறுவதற்கான சகல வழிகளும் அடைக்கப்பட்டுள்ளன. நகருக்கு வெளியே செல்லக்கூடிய கடைசி பாலம் இந்த வார தொடக்கத்தில் ரஷ்யப் படைகளால் தகர்க்கப்பட்டது.

இதனால் நகரில் எஞ்சி இருந்த சுமார் 12,000 குடியிருப்பாளர்களும் சிக்கியுள்ளனர்.

கிழக்கு உக்ரைன் டான்பாஸ் பிராந்தியத்தை முழுமையாகக் கைப்பற்றுவதை இலக்காகக் கொண்டு முன்னேறி வரும் ரஷ்யப் படைகள், முதலில் சீவிரோடோனெட்ஸ்க் நகரைக் கைப்பற்றி தங்கள் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதை இலக்காகக் கொண்டுள்ளன.

நகரைக் கைப்பற்றுவதற்கான கடும் சண்டை கடந்த பல வாரங்களாக இடம்பெற்று வருகிறது.

தற்போது சீவிரோடே னெட்ஸ்க் நகரின் பெரும் பகுதி ரஷ்யப் படைகளில் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது.

அசோட் இரசாயன ஆலை உள்ளிட்ட குறுகிய சில இடங்கள் தொடர்ந்தும் உக்ரைன் படைகளில் கட்டுப்பாட்டில் உள்ளன.

இந்தப் பகுதிகளில் சிக்கியுள்ள சுமார் 12,000 வரையான மக்கள் உணவு, தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள் இன்றி பெரும் நெருக்கடியில் சிக்கியுள்ளமை கவலையளிப்பதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் உட்பட நகரத்தில் சிக்கியுள்ளவர்களுக்கு உதவி வழங்க ஐ.நா. முயன்று வருகிறது.

ஆனால் தொடர்ந்து கடும் சண்டை நடந்து வருவதால் அங்கு செல்வது சாத்தியமற்றதாக உள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (நி-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...றுத்தத்திற்கு தயாரான ரஷ்யா

# ...ிரைவில் அமைதி பேச்சுவார்த்தை

**...தாடர்பான அமைதிப் பேச்சுவார்த்தைக்கு ரஷ்யா ஆர்வமாக ...ாட்டின் ரஷ்ய பாதுகாப்பு கவுன்சில் செயலாளர் நிகோலாய் ...துள்ளார்.**



தற்போதைய முயற்சிகளில் மூலோபாய நகரான சிவெரோடோனெட்ஸ்கை தாக்குதலுக்கு உட்படுத்தி வருகின்றனர்.

அந்தவகையில், சிவெரோடோனெட்ஸ்க் நகரை பிற உக்ரைனிய நகரங்களுடன் இணைக்கும் மூன்று தரைப்பாலங்களையும் ரஷ்யப் படைகள் முழுவதுமாக தகர்த்துள்ள நிலையில், பொது மக்களையும், இராணுவ வீரர்களையும் உடனடியாக சரணடையுமாறு எச்சரித்து வருகின்றனர்.

இந்தநிலையில், உக்ரைனில் போர் தாக்குதலை தீவிரமாக நடத்திவரும் ரஷ்யா, போர் நிறுத்தம் தொடர்பான அமைதி பேச்சுவார்த்தைக்கு ரஷ்யா ஆர்வமாக இருப்பதாக தெரிவித்துள்ளது.

இதுத் தொடர்பாக ரஷ்ய பாதுகாப்பு கவுன்சிலின் செயலாளர் நிகோலாய் பட்ருஷெவ் தெரிவித்துள்ள கருத்தில், கூடிய விரைவில் அரசியல் மற்றும் இராஜதந்திர ஒப்பந்தங்களை உக்ரைனுடன் மேற்கொள்ள ரஷ்யா விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த பேச்சுவார்த்தையானது இருநாடுகளுக்கு இடையே நடைபெற்று வரும் மோதல்களை நிறுத்த அனுமதிக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.(நி-6)

## குரங்கம்மை வைரஸ் பெயரை மாற்ற முடிவு

(ஜெனீவா)

குரங்கம்மை வைரஸ் என்ற பெயரை மாற்ற முடிவு செய்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.

இன ரீதியான பாகுபாடு மற்றும் களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த பெயர் அமைந்துள்ளதாக விஞ்ஞானிகள் குழுவொன்று குரல் கொடுத்ததை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் தெரிவித்துள்ளார்.

புதிய பெயர் பற்றிய அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு இதுவரை 39 நாடுகளில் 1,600 இற்கும் அதிகமானோர் குரங்கம்மை வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவற்றுள் 32 நாடுகளில் முதல் முறையாக தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கடந்த வாரம், 30 இற்கும் மேற்பட்ட சர்வதேச விஞ்ஞானிகள் வைரஸின் பெயரை மாற்றுமாறு வலியுறுத்தினர். இதனை வலியுறுத்தி விஞ்ஞானிகள் கடந்த வெள்ளிக்கிழமை அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

தற்போது உலகெங்கும் குரங்கம்மை வைரஸ் பரவி வரும் நிலையில் இதனை ஆபிரிக்காவுடன் தொடர்ந்து தொடர்புபடுத்துவது தவறானது மட்டுமல்ல, பாரபட்சமானது மற்றும் களங்கப்படுத்துவதும் ஆகும் என்று அவர்கள் தெரிவித்தனர்.



செய்தி நிறுவனங்கள் ஆபிரிக்க நோயாளிகளின் படங்களைப் பயன்படுத்தி தொற்று நோயை சித்தரிக்கின்றன.

ஆனால் இந்த வைரஸ் உலகெங்கும் பல நாடுகளில் தற்போது பரவியுள்ளது.

இந்நிலையில் ஐரோப்பாவில் தொற்று பரவிவருவது குறித்த செய்திகளில் கறுப்பின மக்களின் படங்களைப் ப்யன்படுத்துவதை நிறுத்துமாறு ஆப்பிரிக்காவின் வெளிநாட்டு செய்தியாளர் சங்கம் உலகளாவிய ஊடகங்களை வலியுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

## உக்ரைனுக்கு மேலும் ஆயுதங்களை வழங்கும் அமெரிக்கா

(வோஷிங்டன்)

கப்பல் எதிர்ப்பு ரொக்கெட் அமைப்புகள் (anti-ship rocket systems) ஆட்டிலறி ரொக்கெட்டுகள் (artillery rockets) ஹோவிட்சர் வகை பீரங்கிகள் (howitzers) ம்றறும் வெடிமருந்துகள் உள்ளிட்ட மேலும் 1 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆயுதங்களை உக்ரைனுக்கு வழங்கவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.



உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியுடன் தொலைபேசியில் உரையாடிய பைடன், புதிய ஆயுத உதவிகளை வழங்கும் உறுதிமொழியை அளித்தார்.

இதனைவிட உக்ரைனில் உள்ள மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர், முக்கியமான மருத்துப் பொருட்கள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு, உணவு, தங்குமிடம் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு பணம் வழங்குதல் உள்ளிட்டவற்றுக்கான மனிதாபிமான உதவியாக 225 மில்லியன் டொலர்களை வழங்குவதாகவும் பைடன் அறிவித்தார். (நி-6)

## ஈரான் கடற்கரையில் அடுத்தடுத்து 7 நிலநடுக்கங்கள்

(டெஹ்ரான்)

ஈரானின் தெற்கே அமைந்துள்ள கிஷ் தீவில் அடுத்தடுத்து 7 நிலநடுக்கங்கள் ஏற்பட்டதில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாய் உள்ளிட்ட பெர்சிய வளைகுடா பகுதிகள் குலுங்கின.

ஹார்மோஸ் ஜலசந்திக்கு அருகில் உள்ள தீவில் 6 ரிக்டர் என்ற அளவில் 4 அதிர்வுகளும், 5.3 ரிச்டர் புள்ளியில் ஒரு அதிர்வும் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கட்டாரிலும் ரிக்டர் அளவுகோளில் 5.3 புள்ளிகளாக நிலநடுக்கம் பதிவானது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் எதுவும் வெளியாகாத நிலையில், நில நடுக்கத்தின் அதிர்வுகள் நாடு முழுவதும் உணரப்பட்டிருக்கலாம் என கூறப்படுகிறது.

ஈரான் சராசரியாக ஒரு நாளைக்கு ஒரு நிலநடுக்கத்தை எதிர்நோக்குகிறது.

2003 ஆம் ஆண்டு 6.6 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதில் வரலாற்று நகரமான பாம் தரையிறங்கியதோடு, 26,000 பேர் உயிரிழந்துள்ளனர்.

2017 ஆம் ஆண்டு மேற்கு ஈரானில் ஏற்பட்ட 7 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தில் 600 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததோடு, 9,000 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள வண்ணார்பண்ணை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரி விற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி எதிர்வரும் 20 ஆம் திகதி மு.ப 9 இற்கு பிறவுண் றோட் கலட்டி வீதி, மு.ப 11 இற்கு வீரகத்தி பிள்ளையார் கோவிலடி சீனியர் ஒழுங்கை, பி.ப 2.30 இற்கு ஜயனார் கோவிலடி, 21 ஆம் திகதி மு.ப 9 இற்கு மெதடிஸ் மிசன் பாடசாலை கலட்டி இராமநாதன் வீதி, மு.ப 11 இற்கு சைவ பரிபாலன சபை நீராவியடி, பி.ப 2.30 இற்கு ஆரோக்கிய மாதா கோவிலடி கஸ்தூரியார் வீதி, 22 ஆம் திகதி மு.ப 9 இற்கு கனகசபை வீதி, மு.ப 11 இற்கு பலாலி வீதி 4 ஆம் ஒழுங்கை, பி.ப 2.30 இற்கு குமாரசாமி வீதி, G.S Office, 23 ஆம் திகதி மு.ப 9 இற்கு ஆத்திசூடி சனசமூக நிலையம், மு.ப 11 இற்கு ஞானக்குழந்தை பாலர் பாடசாலை அரசடி வீதி, பி.ப 2.30 இற்கு கலாஜோதி, 24 ஆம் திகதி மு.ப 9 இற்கு முருகமூர்த்தி வீதி, மு.ப 11 இற்கு கலைவாணி சனசமூக நிலையம், பி.ப 2.30 இற்கு தாமரை வீதி, 27 ஆம் திகதி மு.ப 9 இற்கு பெரிய தம்பிரான் வீதி, மு.ப 11 இற்கு வள்ளுவன் சனசமூக நிலையம், மு.ப 2.30 கலைமகள் சனசமூக நிலையம் கே.கே.எஸ்.வீதி, 28 ஆம் திகதி மு.ப 9 இற்கு பிறவுன் வீதி 2 ஆம் ஒழுங்கை, மு.ப 11 இற்கு பிறவுன் வீதி 1 ஆம் ஒழுங்கை, பி.ப 2.30இற்கு அன்னசந்திர லேன் நாவலர் வீதி, 29 ஆம் திகதி மு.ப 9 இற்கு மணிக்கூட்டு ஒழுங்கை, மு.ப 11 இற்கு சபாபதி ஒழுங்கை, பி.ப 2.30 இற்கு பூநாறி ஒழுங்கை ஆகிய இடங்களில் வைத்து ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இச்சந்தப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறும், ஒரு நாய்க்கான ஊசிக்குரிய கட்டணமாக 50 ரூபாய் அறவிடப்படும் எனவும் யாழ்.மாநகர சபை சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்தார். (4-6)



வலிகாமம் வடக்கு மக்களின் இடப்பெயர்வின் 32 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.

(படம் : சிவசாந்தன்)

# தொழில் வழிகாட்டல் செயலமர்வு

(நெளுக்குளம்)

வவுனியா பிரதேச செயலகமானது மனிதவலு, வேலை வாய்ப்பு திணைக்களம் மற்றும் இலங்கை தொழில்நுட்ப பல்கலைக்கழகம் என்பவற்றுடன் இணைந்து விசேட தொழில் வழிகாட்டல் நிகழ்நிலை" செயலமர்வினை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு ZOOM ஊடாக நிகழ்நிலையாக நடாத்த ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுள்ளது என வவுனியா பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

இம்முறை க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய மற்றும் தோற்றவுள்ள மாணவர்கள் அவர்களின் பெற்றோர் மற்றும் தொழில் வழிகாட்டல் துறையில் ஈடுபட்டிருப்போர், அனைவரும் இந்நிகழ்வில் பங்குபற்ற முடியும்.

இச் செயலமர்வில் பங்குபெற விரும்புபவர்கள் கீழ்வரும் Google படிவம் ஊடாக உங்கள் விபரங்களை பதிவு செய்து Zoom link இணை பெற்றுக் கொள்ளலாம். https://forms.gle/3U7FWk6FdXT8LxxS6 மேலதிக தகவல்களுக்கு 076 601 8862/ 077 615 1314 என்ற தொலைபேசியூடாகவும் தொடர்பு கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-299)



சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் தென்மாகாணம் காலி மாவட்டத்தில் உள்ள காலி சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்படும் ஆலயத்தின் நிர்மாணப் பணிகளுக்காக ஒரு லட்சம் ரூபாய் நிதி உதவி நேற்று முன்தினம் புதன்கிழமை வழங்கப்பட்டது.

(படம் : ரவிசாந்)



உலக குருதிக்கொடையாளர் தினத்தை முன்னிட்டு கடந்த செவ்வாய்க்கிழமை நெடுந்தீவு பிரதேச மருத்துவமனையில் மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு இடம்பெற்றது. (படம்: ரவிசாந்)

# மன்னாரில்
## 300 ரூபாய் மண்ணெண்ணெய்க்கு நள்ளிரவு முதல் வரிசை



(மன்னார்)

மன்னார் நகர மத்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நீண்ட நாட்களுக்கு பின்னர் நேற்று வியாழக் கிழமை மண்ணெண்னை விநியோகிக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதலே மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து மண்ணெனன்னையை பெற்றனர். குறிப்பாக ஒவ்வெரு குடும்ப அட்டை தாரர்களுக்கும் 300 ரூபாய்களான மண்ணெண்ணெய்களே வழங்கப்பட்டு வருகின்றன. (4-6-285)



சாவகச்சேரி நகரசபையால் மடத்தடிச் சந்திப் பகுதியில் காணப்பட்ட பாரம்பரிய மடம் மீள்நிர்மானிக்கப்பட்டு அண்மையில் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. (படம் : சுபேசன்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 280 | 320 |
| உருளைக்கிழங்கு | 240 | 220 | 240 | 300 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 500 | 600 |
| தக்காளி | 800 | 650 | 700 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 180 | 140 |
| கோவா | 350 | 350 | 350 | 360 |
| கரட் | 240 | 360 | 400 | 450 |
| பூசணி | 160 | 160 | 160 | 200 |
| புடோல் | 250 | 200 | 240 | 300 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 320 | 400 | 480 |
| பெரிய வெங்காயம் | 200 | 210 | 200 | 250 |
| பாகற்காய் | 600 | 600 | 700 | 600 |
| வெண்டக்காய் | 180 | 200 | 140 | 320 |
| கருணைக் கிழங்கு | 180 | 250 | 240 | 200 |
| பயற்றங்காய் | 350 | 400 | 350 | 320 |
| லீக்ஸ் | 200 | 240 | 360 | 320 |
| பீற்றூட் | 350 | 300 | 300 | 350 |
| கறிமிளகாய் | 400 | 450 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 1200 | 1000 | 800 | 1200 |
| போஞ்சி | 800 | 650 | 700 | 800 |
| கத்தரிதம்புள்ள | 280 | 200 | — | 300 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 80 | 100 |
| தேசிக்காய் | 600 | 500 | 400 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 50-70 |
| இராசவள்ளி | 180 | 340 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 600 | 600 | 500 | 600 |
| முள்ளங்கி | 180 | 200 | -- | 300 |
| பொன்னாங்கண்ணி | 60 | 80 | 100 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 80 | 180 | 80 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனி மாத இராசி பலன்கள்

## 15.06.2022-16.07.2022



யாரையும் சந்தித்தவுடன் நண்பர்களாக்கிக் கொள்ளும் மேஷ இராசி வாசகர்களே!

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய், விரயாதிபதி குருவுடன் இணைந்து விரய ஸ்தானத்திலேயே சஞ்சரிக்கிறார். எனவே எதிர்பாராத விரயம் அதிகரிக்கும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது.

**ரிஷப - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆனி 4 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், வாக்கு, தனம், குடும்பம் ஆகியவற்றை அறிந்து கொள்ளும் இடமான தன ஸ்தானத்தில் உலாவரும்பொழுது, நல்ல யோகங்களைக் கொடுப்பார். குறிப்பாக குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். தனவரவு தாராளமாக வந்து கொண்டேயிருக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள்.

**மிதுன - புதன் சஞ்சாரம்**

ஆனி 11 ஆம் திகதி, மிதுன இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். சகோதர, சகாய ஸ்தானாதிபதியான அவர், அதற்குரிய வீட்டிலேயே சஞ்சரிக்கும் வேளையில் உடன்பிறப்புகளால் உதவி கிடைக்கும். அவர்களின் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறுவதில் இருந்த தடை அகலும். உடன்பிறந்தவர்களின் உத்தியோகத்தில், பணி நிரந்தரமாகலாம்.

**மேஷ - செவ்வாய் சஞ்சாரம்**

உங்கள் இராசி நாதன் செவ்வாய், ஆனி 12 ஆம் திகதி உங்கள் இராசிக்கு வருகிறார். இது ஒரு பொற்காலமாகும்: இதுவரை சனியின் பார்வையில் சிக்கியிருந்த செவ்வாய், இப்பொழுது விடுபடுவதால் எதிர் பார்த்த நல்ல திருப்பங்கள் வந்து சேரும். இடையூறு சக்திகள் அகலும். கட்டடப் பணியில் இருந்த தொய்வுமாறும். பொதுவாக இராசிநாதன் பலம் பெற்றிருக்கும் இந்த நேரத்தில், ஆரோக்கியத் தொல்லைகள் அகலும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்.

**கடக - புதன் சஞ்சாரம்**

ஆனி 28 ஆம் திகதி, கடக இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான




புதன், தாய், வாகனம், கல்வி, சுகம் ஆகியவற்றைக் குறிக்கும் இடத்திற்கு வருகிறார். அந்த இடங்களில் உள்ள தடைகள் மறையும். தாய்வழி பிரச்சினைகள் நீங்கும். வாகனம் வாங்க, கட்டடம் கட்ட, உத்தியோகத்தில் சலுகை கேட்டு விண்ணப்பித்திருந்தால் அது கிடைக்கும். கைவசம் இருந்த நிலம், மதிப்புமிக்கதாக மாறும்.

**மிதுன - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆனி 29 ஆம் திகதி மிதுன இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அங்கு பஞ்சமாதிபதி சூரியனோடு இணைந்து சஞ்சரிக்கிறார். தனாதிபதியும், பஞ்சமாதிபதியும் இணையும் போது, தனவரவு தாராளமாகும். பிள்ளைகளுக்கு படிப் பிற்கேற்ற வேலை கிடைத்து, பஞ்சாயத்துகள் சாதகமாக முடியும். பொது வாழ்வில் இருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப்பெறும். இம்மாதம் சிவபுராணம் படிப்பதோடு நடராஜர் வழிபாட்டையும் நம்பிக்கையோடு செய்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் வரவைக் காட்டிலும் செலவு அதிகரிக்கும். வருங்கால முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி, ஆனி மாதம் 11 ஆம் திகதிக்கு மேல் நடைபெறும். மாதத் தொடக்கத்தில் சனி, செவ்வாய் பார்வை இருப்பதால், கணவன்- மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுங்கள். பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து மகிழ்ச்சியடைவதோடு கல்யாண முயற்சி கைகூடும். பணிபுரியும் பெண்களுக்கு சகப்பணியாளர்களால் தொல்லைகள் அதிகரிக்கும்.

## கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



விடாமுயற்சியால் வெற்றிக் கனியை எட்டிப் பிடிக்கும் ரிஷப இராசி வாசகர்களே!

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் விரய ஸ்தானத்தில் இருக்கிறார். உங்கள் இராசியிலேயே தனாதிபதி புதன் சஞ்சரிக்கிறார். எனவே விரயத்திற்கேற்ற வருமானம் வந்து கொண்டே இருக்கும். ரிஷப - சுக்கிரன் சஞ்சாரம் ஆனி 4 ஆம் திகதி, உங்கள் இராசிநாதனான சுக்கிரன், உங்கள் இராசிக்கே வருகிறார். அவர் உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்திற்கும் அதிபதியானவர். உங்கள் இராசியில் இருக்கும் புதனோடு, சுக்கிரன் இணைவதால் "புத சுக்கிர யோகம்" ஏற்படுகிறது. எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொகை வரவு உண்டு. தொழில் ரீதியாக எடுத்த முயற்சியில் அனுகூலமும், ஆதாயமும் கிடைக்கும். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு.

**மிதுன - புதன் சஞ்சாரம்**

ஆனி 11 ஆம் திகதி, மிதுன இராசிக்கு புதன் செல்கிறார். மிதுனம் புதனுக்கு சொந்த வீடாகும். அங்குள்ள சூரியனோடு இணைந்து "புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகின்றார். எனவே பொது வாழ்வில் புகழ் கூடும். .அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். பஞ்சமாதிபதியாகவும் புதன் விளங்குவதால் பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாகவும், கடல் தாண்டிச் சென்று படிப்பது சம்பந்தமாகவும் எடுத்த முயற்சி கைகூடும்.

**மேஷ - செவ்வாய் சஞ்சாரம்**

ஆனி12 ஆம் திகதி, மேஷ இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது எதிர்பாராத சில விரயங்கள் ஏற்படலாம். பொருளாதார நெருக்கடி அதிகரிக்கும். பணிபுரியும் இடத்தில் பக்குவமாக நடந்து கொள்ளுங்கள். பணப்பொறுப்பில் இருப்பவர்கள், கவனச் சிதறல் இல்லாமல் செயற்படுங்கள்.

**கடக - புதன் சஞ்சாரம்**




ஆனி 28 ஆம் திகதி, கடக இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, குடும்ப ஒற்றுமை பலப்படும். கொடுக்கல் - வாங்கல் ஒழுங்காகும். தடைபட்டு வந்த காரியங்கள் துரிதமாக நடைபெறும். வழக்குகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத் தேவைகள் படிப்படியாக பூர்த்தியாகும். பிள்ளைகள் வழியில் சுபச்செய்திகள் வந்து சேரும்.

**மிதுன - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆனி 29 ஆம் திகதி, மிதுன இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிநாதன் தனஸ்தானத்திற்கு செல்லும் இந்த வேளையில் பணப் புழக்கம் அதிகரிக்கும். தொழிலை விரிவுபடுத்த முயற்சிப்பீர்கள். உத்தியோகத்தில் ஊதிய உயர்வும், பதவி உயர்வும் கிடைக்க வழிபிறக்கும். வழக்குகளில் சாதகமான சூழ்நிலை உருவாகும். ஜீவன ஸ்தானாதிபதியாகவும் சுக்கிரன் விளங்குவதால் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். புகழ்மிக்கவர்களைக் கொண்டு காரியங்களை சாதிப்பீர்கள். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். இம்மாதம் பிரதோஷ வழிபாட்டை மேற்கொண்டு நந்தியம்பெருமானை வழிபடுங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதத் தொடக்கத்தில் விரயங்கள் ஏற்பட்டாலும், மாதத்தின் பிற்பகுதியில் பணவரவு திருப்தியாக இருக்கும். கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு, அலுவலகத்தில் கேட்ட சலுகைகள் கிடைக்கும். அரச வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு அதுவும் கைகூடலாம். தசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடு திருப்தியளிக்கும்.

## கவனச் சிதறல் இல்லாமல் செயற்படுங்கள்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




(நேற்றைய தொடர்ச்சி)

## அம்புலிமாமா

# இசையும் உணவும்



மறுநாள் தினமும் வந்து நின்ற யாசகன் வரவில்லை. வேறொரு யாசகன் தான் வந்தான். கோபாலன் பழைய யாசகன் வருவானா? என்று பார்த்து நிற்கவே புதிய யாசகன் அவனை அணுகி "நீங்கள் அளிக்கும் உணவு மிக நன்றாக இருக்கிறது என்று கூறி என் யாசக நண்பன்தான் இங்கே அனுப்பினான். நான் உங்கள் பாட் டைக் கேட்டு விட்டு சாப்பிட்டு விட்டுப் போகிறேன்" என்றான்.

அதுகேட்டு கோபாலன் அதுசரி, அந்தப் யாசகன் ஏன் வரவில்லை?" என்று கேட்டான். யாசகனும் "என் யாசக நண்பனுக்கு சங்கீத ஞானம் அதிகம். அதனால்தான் தாங்கள் பாடுவதைக் கேட்கத் தயங்குகிறான். எனக்கு சங்கீதம் பற்றி எதுவும் தெரியாது. அதனால் தான் தயங்காமல் சாப்பிட வந்தேன்" என்றான். அதைக் கேட்டுக் கொண்டே அங்கு வந்த சரஸ்வதி என்ற பெண் "களுக்" கென்று சிரித்தாள். அது கண்டு முகம் சிணுங்கி கோபாலன் "ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்டான். அவளும் "எனக்கு சமையல் கற்க எரிச்சல். ஆனால் பெண்ணாகப் பிறந்த நான் சமையல் கற்றுக் கொள்ள வேண்டும் என்று என் தந்தை வற்புறுத்துகிறார். உங்களைப் போல யாராவது எனக்கு சாப்பாடு போடுவதானால் நான் எவ்வளவு பாட்டுக்கள் வேண்டுமானாலும் எவ்வளவு நாட்களுக்கும் கேட்கத் தயார்" என்றாள்.


அப்போது அங்கிருந்த யாசகன் "உனக்கு இசை ஞானம் இல்லையா?" என்று அவளைப் பார்த்து ஆச்சரியத்தோடு கேட்டான். அவளும் "ஏன் இல்லா மல்? என் தந்தை பிரபல சங்கீத வித்துவான். அவர் பாட்டைக் கேட்க தினமும் பலர் வருகிறார்கள். வருப வர்களுக்கு சாப்பிட எதுவும் கொடுக்க முடிய வில்லையே என்று என் தந்தை வருந்துகிறார். என் சமையல் நன்றாக இராது. இதனால் தினமும் என் வீட்டில் சண்டைதான்" என்றாள்.

கோபாலனும் "அப்படியானால் நீ கண்டிப்பாக என் பாட்டைக் கேட் கத் தான் மாட்டாய்" என்றான். அவளோ "அதெல்லாம் இல்லை. சமையல் செய்வதிலிருந்து தப்ப நான் எதையும் செய்யத் தயார். உன் பாட்டையும் சகித்துக் கொள்வேன். இதில் ஒரு சிரமமும் எனக்கு இல்லை. எனக்கு இஷ்டமில்லாத வேலையை நான் செய்ய மாட்டேன் என்றாள்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## யுத்த காண்டம்




தூதுவர்க்கு உரிய மரியாதையை இராமன் அவர்களுக்குக் காட்ட விரும்பினான்; தீய சிந்தையரைக் காட்டும் போது விழும் தரும அடிகள், அவர்களை அணுகவில்லை; "மறைந்திருந்து மறைகளை அறிந்து சொல்ல வேண்டிய தேவையில்லை; நிறைந்திருந்து இங்குள்ள நிறைகுறைகளை எண்ணிக்கை விடாமல் தெளிவாய் அறிவிக்கலாம்" என்றான் இராமன்.

"எங்கள் வீரத்தை எடுத்து விளம்ப எங்களுக்கு நீங்கள் தொடர்பேசியாய் இருப்பீர் என்று எதிர்பார்க்கிறேன்; அஞ்சாமல் சொல்லலாம்; நாங்கள் நேரில் சொன்னால் உம் தலைவன் நம்ப மாட்டான்; அறிந்து வந்து அறிவித்தால் அதற்கு ஆதிக்கம் அதிகம்" என்று சொல்லி அனுப்பினான்.

"தப்பியது இராம பிரான் புண்ணியம்" என்று தலைகாட்டாமல் வந்தவழி நீட்டினர். செய்தி கொண்டு சென்ற சேவகர் தாம் ஒற்றி அறிந்து கற்று வந்ததை முற்றுமாக இராவணனுக்கு உரைத்தனர்; கடல் கடந்த அக்கரைச் சீமையில் போர்ப்பயிற்சி பெற்ற சேனைகளைப் பற்றியும், இராமன் தோற்றத்தில் தாம் கண்ட ஏற்றத்தைப் பற்றியும், சரண் அடைந்து சாதியை மறந்து நீதிக்காகப் போராடும் வீடணனை [illegible] பற்றியும், அவன் பகைவர்களின் உளவாளியாகச் செயலாற்றுவதையும், இராவணன் சந்திக்க வேண்டிய சாதனைகளைப் பற்றியும் கூட்டாமலும் கழிக்காமலும் உள்ளதை உள்ளவாறு உரைத்தனர் ஆயினர்.

ஆணவம் மிக்க இராவணன், உலகப் போர்களுக்குத் துணை போகும் சர்வாதிகளைப் போலச் சிந்தனையின்றி, கர்வம் கொண்டு ஆவேசம் காட்டினான்; தன் வரத்திலும் உரத்திலும் நம்பிக்கை வைத்திருந்தான், இடியேறு அஞ்சும்படி இராமனை எள்ளி நகையாடினான்; எதிரிகள் மடிவது என்ற உறுதியில் பிடிவாதம் காட்டினான். நாவினால் பேசுவதைவிட வாளினால் வீசுவதையே நம்பினான் சொல்லேர் உழவனாய் இருந்து விவாதிப்பதை விட்டு வில்லேர் உழவனாகச் செயற்பட விரும்பினான்.

இராவணன் நிலை இவ்வாறு ஆக, இராமன் செயல் வேறு விதமாய் இருந்தது; இலங்கை மாநகரின் மலை உச்சியில் ஏறி நின்று.

அந் நகரைக் கண்டு மலைத்தான்; பொன்னொளிர் மதில்களையும், மின் அமர் மாளிகைகளையும் கண்டு வியந்தான்; நகரத்தின் எழிலையும், மக்களின் கலைத் திறனையும் இலக்குவனுக்குக் காட்டினான்; சிற்பிகள் சிரத்தை எடுத்துச் செதுக்கிய கற்பனைகளைக் கற்களில் காட்டினான்; அவன் அன்னை கைகேயி, அயோத்தியில் அடிவயிற்றில் ஊட்டிய தீ, அணையாமல் சுடர்விடுவது போல அனுமன் மூட்டிய தீ வானை முட்டிக்கொண்டு எரிந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியை வெல்ல சபையில் செயற்றிட்டம் சமர்ப்பிப்பு

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்வதற்கான யோசனைகளை உள்ளடக்கிய செயற்றிட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்று முன்தினம் பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் யோசனைகளை பெற்றுக் கொண்டதன் பின்னர் இந்த செயற்றிட்டம் தயாரிக்கப்படவுள்ளது என்றும் அவர் கூறினார்.

தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கென அரசாங்கம் முன்னெடுக்கும் குறுங்கால, இடைக்கால செயற்றிட்டங்கள் பற்றி நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன இதன் போது விளக்கம் அளித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷ டி சில்வா, இரான் விக்ர மரட்ன, ரவூப் ஹக்கீம், அலிசப்ரி, அனுர பிரியதர்ஷன யாப்பா, சரித்த ஹேரத் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ம-7)

# எரிபொருளை பெற்றுக்கொள்ள பங்கீட்டு முறை நடைமுறை

## இரு வாரங்களில் அமுலாகும்

(கொழும்பு)

எரிபொருளை பங்கீட்டு (RATION) முறைக்கு வழங்கும் அட்டை ஒன்று அறிமுகப்படுத்தப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் இவ் அட்டை நடைமுறைக்கு வரும் என தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விநியோகம் தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு வாரத்திற்கு 100 லீற்றருக்கான பங்கீட்டு அட்டை கிடைக்கும் நபருக்கு அதில் 60 லீற்றரினை பதிவு செய்த எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் மற்றும் மீதமுள்ள 40 லீற்றர் எரிபொருளை நாட்டின் வேறு எந்தவொரு எரிபொருள் நிலையத்திலும் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் முறைமையொன்றை தயாரிப்பது தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்று வருவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7)

### எரிபொருளை கோரி

# புலோலியில் பொதுமக்கள் வீதியை மறித்து போராட்டம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை புலோலி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கருகில் மக்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதிகாலை முதல் மக்கள் எரிபொருளுக்காக காத்திருந்த நிலையில் மதியத்திற்கு பின்பே எரிபொருள் விநியோகிக்க ஆரம்பித்துள்ளனர்.

அதன்பின் மின்துண்டிப்பை காரணம் காட்டியும், கடமை நேரம் முடிந்து விட்டதாக கூறியும் எரி பொருள் விநியோகத்தை இடைநிறுத்தியதால் அதிருப்தியடைந்த மக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தொடர்ந்து சம்பவ இடத்திற்கு பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அழைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. (ம-7,60)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை 11 ஆம் திகதி காலை 8.00 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** பளை காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தில் மின்சாரம் தடைப்படும்.

# எரிபொருளை பெற்றுக்கொள்ள புதிதாக இரண்டு சர்வதேச நிறுவனங்கள் தெரிவு

(கொழும்பு)

இலங்கை எரிபொருளை பெற்றுக்கொள்ள புதிய இரண்டு சர்வதேச நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மேலும், விமானங்களுக்கான ஜெட் எரிபொருள் விநியோகிக்க மற்றுமொரு தனியார் நிறுவனமும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கும்போது, இதுவரை எரிபொருள் நிறுவனங்களுக்கு 735 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்த வேண்டியுள்ளதாகவும் மேலும், இந்தியாவிடமிருந்து 500 மில்லியன் டொலர் பெற்றுக்கொள்வது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அத்தோடு, மீண்டும் நாட்டுக்கு எரிபொருள் கிடைக்கும் திகதி தொடர்பில் தற்போது சரியாக குறிப்பிட முடியாதுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-7)

# இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

காவிரியில் ஒருவன் நீராடுவது காவிரிக்கு நன்மை விளையும் பொருட்டன்று. தன் உடம்பில் உள்ள வெப்பம் தணியும் பொருட்டு காவிரியில் நீராடுகிறான். அதுபோல் அருட் கடலாய் இருக்கின்ற ஆண்டவனை வழிபட்டால் நம்முடைய பிறவி வெப்பம் தணிகிறது.

**"ஆர்த்த பிறவுத் துயர் கெட நாம் ஆர்த்தாடும்**
**தீர்த்தன் நன்று இல்லை சிற்றம்பலத்தே தீயாடும் உந்தன்"**

என்று மாணிக்கவாசக சுவாமிகள் திருவெம்பாவையில் அருளிச்செய்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## சரணடைதல்

சரணடைதல் ஒரு செயல் அல்ல அது உங்களுடைய இயல்பின் ஒரு நிலை. இதை நீங்கள் புரிந்து கொள்வீர்களோ இல்லையோ நிச்சயம் அது இருக்கிறது. விவேகி விழித்துக் கொண்டு இதை விரைவில் கண்டு கொள்கிறான். விவேகம் அற்றவன் சற்று அதிகமான காலம் எடுத்துக் கொள்கிறான்.

அதுவா அல்லது இதுவா என்னும் தெரிவு உங்களுக்கு இல்லை என்பதையும் நீங்கள் உங்களுள் ஆழத்தில் சரணாகதி நிலையில் இருக்கிறீர்கள் என்பதையும் புரிந்து கொள்ளவும்

நல்ல சேவை செய்வதற்குரிய ஆற்றலைக் கெட்ட மனிதனிடம் ஒருநாளும் காண முடியாது.
— பர்க்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# இதைவிட்ட கொடுமை வேறு என்ன இருக்கிறது

அந்தோ! எரிபொருள் நிலையங்களில் பெற்றோலுக்கும் டீசலுக்கும் நின்ற வரிசை கண்டு மனம் விறைத்துப் போனது.

என்னே கொடுமை. எரிபொருள் நிலையத்திலிருந்து இரண்டு கிலோமீற்றர் தூரத்துக்கு மக்கள் வரிசையில் காத்து நிற்கின்றனர் எனில்,

இதைவிட்ட கொடுமை வேறு என்னவாக இருக்க முடியும்.

ஆம், அதிகாலைப் பொழுதில் இருந்து நெருப்பாய்ச் சுடும் பகல்பொழுதில் காய்ந்து இரவு கடந்தும் எரிபொருளை வாங்க முடியாமல் கால்கடுக்க களைத்து நிற்கும் அவலத்தை தருவதற்கு ஒரு ஜனாதிபதி, ஒரு பிரதமர், அமைச்சர்கள், அகமும் புறமுமான பாராளுமன்ற உறுப்பினர்கள் தேவையா என்ன?

அதிலும் ஆட்சிக்காலம் முடியும்வரை ஜனாதிபதிப் பதவியை இராஜினாமாச் செய்ய மாட்டேன் எனக் கர்ச்சிக்கும் கோட்டாபய ராஜபக்ஷவின் மனநிலை எப்படி என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால், இப்படியும் இரக்கமற்றவர்கள் இருக்கிறார்களா? என்று எண்ணத் தோன்றும்.

ஆம், பொருளாதார நெருக்கடியில் மக்கள் அவலப்படுகின்றனர்.

ஒருநேர உணவுக்காக ஏங்குகின்ற பரிதாபம் சூழ்ந்துவிட்டது.

இந்தநேரத்தில் எரிபொருள் தட்டுப்பாடும் அதற்காக நாள் முழுக்கக் காத்திருக்கும் வேதனையும் சொல்லிமாளா.

இந்தநிலையில் வெளிநாட்டு உதவிகள் வந்து கொட்டுவது போல பாசாங்கு செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இப்போது எதுவும் பேசாதிருக்கின்றார்.

ஆக, பிரதமர் பதவிக்காக இந்த நாட்டு மக்களுக்கு ரணில் விக்கிரமசிங்க செய்த துரோகத்தனம் கொஞ்சநஞ்சமல்ல.

கப்பல் கவிழ்ந்து கொண்டிருக்கிறது. அந்தக் கப்பலை மீட்க முடியாது என்றபோது, அதற்குக் கப்டனாக நான் வருகிறேன் என்று ஒருவர் கூறுவாராக இருந்தால், அவரின் மனநிலை எப்படியானதாக இருக்கும் என்பதை எவரும் புரிந்து கொள்வர்.

உண்மை, பொருளாதார நெருக்கடியால் இலங்கை தாண்டு போகிறது. அதைக் காப்பாற்றுவதாக இருந்தால் ஜனாதிபதி பதவி விலக வேண்டும்.

அதைச் செய்வதற்காக மக்கள் போராடுகின்றனர்.

அந்தப் போராட்டத்தை பிசுபிசுக்க வைத்து ஜனாதிபதியைக் காப்பாற்றி அதன்மூலம் ஒருவர் பிரதமராகின்றார் எனில், அவரால் நாட்டை மீட்க முடியுமா என்ன?

ஆக, சிங்கள மக்கள் மீண்டும் அகிம்சை வழிப் போராட்டத்தை ஆரம்பித்தாலன்றி, இந்த நாட்டுக்கு விமோசனம் கிடையாதென்பது சர்வநிச்சயம்



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 09

**1932 - 1933 சோவியத் ஒன்றியத்தின் அதிபரான ஜோசப் ஸ்டாலின் எடுத்த கூட்டுமயமாக்கல் கொள்கை மிகப் பெரும் பேரழிவை ஏற்படுத்தியது. ஹோலோடோமர் என்று அழைக்கப்படும் இந்தப் பேரழிவில் பல இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். அவர்களில் பெரும்பாலோனோர் உக்ரைன் மொழி பேசும் மக்கள் ஆவர்.**

### உக்ரைனில் பெரும் பஞ்சம் (Holodomor) (1932-1933)

உக்ரைனிய மொழியில் இருந்து மொழிபெயர்க்கப்பட்ட ஹோலோடோமோர் என்றால் "பசியால் மரணம்", "பசி பட்டினியால் கொலை", அல்லது சில நேரங்களில் "பசியால் அல்லது பட்டினியால் கொலை" என்று பொருள்படும். நேபிள்ஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஆண்ட்ரியா கிரேசியோசி. ."ஹோலோடோமரைப் ، பொறுத்தவரை, உணவு உற்பத்தியாளர்களாக இருந்த மக்களின் ஊட்டச்சத்தை (உயிர்வாழ்வதற்காக) பறித்து முறைப்படி திட்டமிட்டு நடத்தப்பட்ட முதல் இனப்படுகொலை இதுவாகும். குறிப்பாக கொடூரமான விடயம் என்னவென்றால், இனப்படுகொலைக்கான ஆயுதமாக உணவைத் தடுத்து நிறுத்துவது பயன்படுத்தப்பட்டது" என்று கூறியிருந்தார்.



ஜோசப் ஸ்டாலின்

1932 மற்றும் 1933 இல், ஜோசப் ஸ்டாலினின் சோவியத் அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட மனிதனால் உருவாக்கப்பட்ட பஞ்சமான ஹோலோடோமரில் மில்லியன் கணக்கான உக்ரைனியர்கள் கொல்லப்பட்டனர். ஹோலோடோமரின் முதன்மையான பாதிக்கப்பட்டவர்கள் (அதாவது "பட்டினியால் ஏற்படும் மரணம்") கிராமப்புற விவசாயிகள் மற்றும் கிராமவாசிகள் ஆவர். 1930களில் உக்ரைனின் மக்கள்தொகையில் சுமார் 80 சதவீதம் பேர் கிராமப்புற விவசாயிகள் மற்றும் கிராமவாசிகளாக இருந்தனர்.

**1932 மற்றும் 1933 இல், ஜோசப் ஸ்டாலினின் சோவியத் அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட மனிதனால் உருவாக்கப்பட்ட பஞ்சமான ஹோலோடோமரில் மில்லியன் கணக்கான உக்ரைனியர்கள் கொல்லப்பட்டனர்.**

உக்ரைனிய இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்களின் துல்லியமான எண்ணிக்கையை தீர்மானிக்க இயலாது என்றாலும், அறிஞர்களின் பெரும்பாலான மதிப்பீடுகள் அண்ணளவாக 3.5 மில்லியனிலிருந்து 7 மில்லியன் வரை இருக்கும் (சில மதிப்பீடுகள் அதிகமாக உள்ளன) என்று கூறுகிறது. மிக விரிவான மக்கள்தொகை ஆய்வுகள் இறப்பு எண்ணிக்கை 3.9 மில்லியன் என மதிப்பிட்டுள்ளது. மற்ற இனப்படுகொலைகளைப் போலவே, துல்லியமான எண்ணிக்கை ஒருபோதும் அறியப்படாது என்பதை வரலாற்றாசிரியர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.




Holodomor icon
சின்னம்

**உக்ரைன்மக்களுக்கு எதிராக சோவியத் யூனியன் அரசாங்கத்தால் பஞ்சம் ஏற்படுத்தப்பட்டது என்று கூறப்படுகிறது. உக்ரைனில் பட்டினியால் இனப்படுகொலைக்கு வழிவகுத்த கொள்கைகளை ஸ்டாலின் வெளியிட்டார்.**

**ஹோலோடோமர் சமாதான காலத்தில் நிகழ்ந்தது, போர் அல்லது இயற்கை பேரழிவின் விளைவாக அல்ல. உணவு ஆயுதமாக பயன்படுத்தப்பட்டது.**

Holodomor (பெரும் பஞ்சம்) பற்றிய ஆய்வின் மூலம், Holodomor ஒரு குறிப்பிட்ட இனக் குழுவை ஆதிக்கம் செலுத்துவதற்கும் அக் குழுவைக் கட்டுப்படுத்துவதற்கும் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதற்கும் எப்படி வழிவகுக்கும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடியும்.




**Holodomor (பெரும் பஞ்சம்) பற்றிய ஆய்வின் மூலம், Holodomor ஒரு குறிப்பிட்ட இனக் குழுவை ஆதிக்கம் செலுத்துவதற்கும் அக் குழுவைக் கட்டுப்படுத்துவதற்கும் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதற்கும் எப்படி வழிவகுக்கும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடியும்.**

### பெரும் பஞ்சத்துக்கு (Holodomor) முன் உக்ரைன்

18 ஆம் நூற்றாண்டில் தொடங்கி, உக்ரைனிய பிரதேசங்கள் ஆஸ்திரிய மற்றும் ரஷ்ய பேரரசுகளுக்கு இடையில் பிரிக்கப்பட்டன.

முதலாம் உலகப் போருக்குப் பிறகு மற்றும் பெப்ரவரி 1917 இல் ரஷ்ய முடியாட்சி அகற்றப்பட்டதைத் தொடர்ந்து, உக்ரைன் ஒரு தற்காலிக அரசாங் கத்தை அமைத்து, ஜனவரி 1918 இல் தன்னை சுதந்திரமான உக்ரைனிய மக்கள் குடியரசாக அறிவித்தது.

உக்ரைனிய மக்கள் குடியரசு போல்ஷிவிக் செம்படையுடன் மூன்று ஆண்டுகள் (1918-1921) போரிட்டது, ஆனால் அதன் சுதந்திரப் போராட்டத்தில் அது தோல்வியடைந்தது.

**1917 இல் ரஷ்ய முடியாட்சி அகற்றப்பட்டதைத் தொடர்ந்து, உக்ரைன் ஒரு தற்காலிக அரசாங்கத்தை அமைத்து, ஜனவரி 1918 இல் தன்னை சுதந்திரமான உக்ரைனிய மக்கள் குடியரசாக அறிவித்தது.**

**உகரைனிய மக்கள் குடியரசு போல்ஷிவிக் செம்படையுடன் மூன்று ஆண்டுகள் (1918-1921) போரிட்டது, ஆனால் அதன் சுதந்திரப் போராட்டத்தில் அது தோல்வியடைந்தது.**

**உக்ரைனிய பிரதேசத்தின் பெரும்பகுதி பலவந்தமாக சோவியத் சோசலிச குடியரசுகளின் ஒன்றியம் (USSR) உடன் இணைக்கப்பட்டது,**

Holodomor (ஹோலோடோமோர்) காலத்தில் உணவு தேடி அலையும் மக்கள்



(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை...

இதனை அறிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இவ்வாறு பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ம-7)

## எரிவாயுவை...

தகனசாலை, மருத்துவமனை உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே விநியோகிக்கப்படும் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறித்த கையிருப்புக்கள் தீர்ந்த பின்னர் இதுவரை புதிய எரிவாயு கொள்வனவுக்கான உத்தரவு எதுவும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த எரிவாயு கப்பல் நாட்டை வந்தடைய குறைந்தது இன்னும் மூன்று வாரங்கள் ஆகுமென லிட்ரோ காஸ் நிறுவன தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம-7)

## பல கிலோ மீற்றர்...

கிழமை சாவகச்சேரி, சுன்னாகம், புலோலி மற்றும் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தி ஆகிய இடங்களில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் விநியோகிக்கப்படும் எனப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்திருந்தது.

இதனையடுத்து நேற்று அதிகாலை 3 மணி தொடக்கம் பெற்றோலைப் பெற்றுக் கொள்ள மக்கள் நீண்ட வரிசைகளில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காத்திருந்தனர்.

இந்நிலையில் யாழ்.நகரத்தில் அமைந்துள்ள மூன்று எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உட்பட யாழ். மாவட்டத்தின் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களிற்கும் நேற்றையதினம் காலை எரிபொருள் வந்தடைந்தது.

அத்துடன் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களிற்கு நேற்று பிற்பகல் எரிபொருள் வந்தடைந்தது. இதனையடுத்து எரிபொருள் விநியோகப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதேவேளை, கிடைக்கப்பெற்ற பெற்றோலை அனைவருக்கும் பகிர்ந்தளிக்கும் முகமாகச் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஆயிரம் ரூபாய்க்கும் ஒரு சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 2000 ரூபாய்க்கும் பெற்றோல் விநியோகிக்கப்பட்டது. (ம-7,18,33)

## வரிசையில்...

திடீரென ஏற்பட்ட மாரடைப்பினால் அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

53 வயதான முச்சக்கரவண்டி சாரதியே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். குறித்த நபர் தனது மகனுடன் எரிபொருள் வரிசையில் காத்திருந்த போது மாரடைப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, பூகொட பகுதியில் எரிவாயு வரிசையில் நின்ற ஒருவர் உயிரிழந்துள்ளார். 64 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## 50 ஆயிரம்...

தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்குத் தேவையான நிதியை இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்திற்கு ஒதுக்குவது என பிரதமர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இதன்மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அரிசித் தட்டுப்பாட்டைத் தவிர்க்கவும், அரிசி விலையில் அசாதாரணமான உயர்வைக் கட்டுப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7)

## நாட்டில் ஆட்சி...

விரைந்து நடத்தப்பட வேண்டும்."

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

"இலங்கையின் தற்போதைய அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண வேண்டுமெனில் ஆட்சி மாற்றம் கட்டாயம் வேண்டும் என்று வலியுறுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கருத்தை நாம் வரவேற்கின்றோம். எமது கட்சியினதும் நிலைப்பாடும் இதுவாகவே உள்ளது.

தற்போதைய ஆட்சியில் சூதாட்ட அரசியல் சூடுபிடித்துள்ளது. இது நாட்டுக்குக் கேவலமானது. அதேவேளை, இந்த ஆட்சியால் நாள்தோறும் வீதிகளில் வரிசைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. அனைத்துப் பொருட்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பொருட்களின் விலையும் நாள்தோறும் சடுதியாக உயர்வடைந்து வருகின்றது. மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆட்சி மாற்றம் நிகழ்ந்தால்தான் எமது நாடு மீண்டெழ சர்வதேசம் கைகொடுக்கும். இந்த அராஜக ஆட்சி தொடர்ந்தால் அதலபாதாளத்தில் விழுந்து கிடக்கும் நாட்டின் பொருளாதாரத்தைத் தூக்கி நிமிர்த்த முடியாது. எனவே, ஆட்சி மாற்றம் உடன் அவசியம் என்றார். (ம-7)

## எரிபொருள்...

பொருள் எப்போது கிடைக்கும் என்று உறுதியாக கூறமுடியாது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையில் வாகனங்கள் காத்து நிற்கும் நிலையில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நபர்களுக்கு மாத்திரமே எரிபொருளை வழங்க முடியும்.

ஒரு லோட் எரிபொருள் என்பது 6,600 லீற்றர்களாகும். முன்னர் அறிவிக்கப்பட்ட எரிபொருள் விநியோக கட்டுப்பாட்டிற்கு அமைய ஒரு லோட் மூலம் 220 வாகனங்களுக்கு மாத்திரமே எரிபொருளை பெற்றுக் கொடுக்க முடியும். எனினும் 2 ஆயிரத்திற்கும் அதிகமான வாகனங்கள் வரிசையில் நிற்கின்றன.

"தயவுசெய்து இது தொடர்பில் அறிந்து கொள்ளுங்கள். எரி பொருள் பவுசர்களை ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு மீண்டும் மீண்டும் அனுப்ப முடியாது."

எனவே அடுத்த திட்டமிடப்பட்ட திகதியில் தான் குறித்த எரிபொருள் நிலையத்திற்கு எரிபொருளை அனுப்ப முடியும்.

எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்னால் குழப்பநிலை ஏதும் ஏற்பட்டால், அன்றைய தினத்தில் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு எரிபொருளை பெற்றுக் கொடுக்க முடியாது போகும் என்பதை வருத்தத்துடன் இங்கு கூறவேண்டியுள்ளது என்றார். (ம-7)

*(இதுதொடர்பான மேலும் ஒரு செய்தி உள்ளே)*

## எவ்...

நேற்று இடம்பெற்ற யாழ் மாநகர சபை அமர்விலேயே இந்த விசேட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

[illegible] மேலும் தெரிய வருவதாவது, நாட்டில் காணப்படும் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் உள்ளூராட்சி சபையின் உறுப்பினர்களுக்கு கொடுப்பனவு வழங்காததால் சபை கலைக்கப்படுகின்ற சூழல் ஏற்படுமானால் யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் எவ்வித கொடுப்பனவுமில்லாமல் பணியாற்றுவது என எடுத்துக்காட்டும் வகையில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணனால் கொண்டுவரப்பட்ட இந்த பிரேரணைக்கு இரண்டு உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தபோதும் ஏனைய உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ம-7,33)

## வடக்கில்...

லாம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி நகர், பூநகரி பகுதிகளிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டானிலும் வவுனியா மாவட்டத்தில் இரட்டைபெரியகுளம் பகுதி மற்றும் மன்னாரில் பேசாலை பகுதிகளில் உள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோலை பெற்றுக்கொள்ள முடியும்.

இதேவேளை 95 ரக பெற்றோலானது வட மாகாணத்தில் இயக்கச்சி, பளை, வவுனியா ஆகிய பிரதேசங்களில் விநியோகிக்கப்படும்.

அதேவேளை டீசலானது யாழ் மாவட்டத்தில் கைதடி, நெல்லியடி, புலோலி, நாவற்குழி ஆகிய பிரதேசங்களிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் வாடியடி மற்றும் இயக்கச்சி ஆகிய இடங்களிலும் ஓமந்தை, முல்லைத்தீவு நகர் உள்ளிட்ட இடங்களிலும் டீசலினை பொதுமக்களுக்கு விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (ம-7)

தன நிதானய
திகதி - 2022.06.16
சீட்டிழுப்பு இலக்கம் - 818
M 34 42 58 64
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

மஹஜன சம்பத
திகதி 2022/06/16
சீட்டிழுப்பு இலக்கம் 4788
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
F 1 7 4 6 9 1
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.06.16
சீட்டிழுப்பு இலக்கம் 097
வெற்றி இலக்கங்கள்
கன்னி 07 21 30 53 கன்னி
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 16/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1136
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
D 02 02 04 34 65

கொவிசெத
திகதி 2022.06.16
சீட்டிழுப்பு இலக்கம் 3030
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
R 21 25 32 76
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 16/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1266
வெற்றி இலக்கங்கள்
தனுசு 6 5 6 2 6 4
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1763
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2022.06.16
தினம் வியாழக்கிழமை
P 11 14 31 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 2,236,400/-

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.06.16
சீட்டிழுப்பு இல : 3924
வர்ணம் : சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 3,484,740/-
வெற்றி இலக்கங்கள்
18 19 32 72 W
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட்
ரூ. 3,261,373.20
திகதி 2022-06-16
வெற்றி வாரம் 3475
வெற்றி இலக்கங்கள்
43 48 58 62
விருச்சிகம்
வர்ணம் கசிலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 7,912,520/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 32 08 38 61 64
சீட்டிழுப்பு வாரம் 939
2022.06.16 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 242,709,775/-
011-2 333 546-47
Web : www.dlb.lk

வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1589
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.06.16
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 3,150,220/-
அத கோடிபதி ADA KOTIPATHI
வெற்றி இலக்கங்கள்
12 20 75 76 M

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருளை வழங்கக் கோரி வவுனியாவில் மக்கள் முரண்பாடு

(வவுனியா)

வவுனியா நகர மத்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை வழங்குமாறு கோரிமக்கள்முரண் பட்டமையினால் பதற்றமான சூழல் ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த பகுதிக்கு வருகை தந்த வவுனியா பொலிஸார் நிலைமையினை கட்டுக்குள் கொண்டு வந்ததோடு ஒன்று கூடிய மக்களினை அப் பகுதியில் இருந்து கலைந்து செல்ல வைத்தனர். (ம-7,299)

## வவுனியாவில் எரிபொருளுக்காக காத்திருந்தவர்களுக்கு
### குளிர்பானம் வழங்கிவைப்பு



(வவுனியா)

வவுனியா மன்னார் வீதி சந்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு கடந்த மூன்று நாட்களுக்கும் மேலாக எரிபொருள் எதுவும் வராத நிலையில் பொதுமக்கள் தமது வாகனங்களுடன் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில் எரிபொருளுக்காக காத்திருந்தவர்களுக்கு குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தினரால் குளிர்பானம் வழங்கப்பட்டது.

இதேவேளை இச்செயற்பாடு காரணமாக அங்கிருந்தவர்கள் அதனைப் பெற்று மகிழ்சியுடன் பருகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,299)

## எண்ணெய் பற்றாக்குறையால்
# ரயில்களும் எதிர்காலத்தில் இயங்க முடியாமல் போகலாம்?

(கொழும்பு)

இயந்திரங்களுக்கு தேவையான எண்ணெய் பற்றாக்குறை காரணமாக எதிர்காலத்தில் ரயில்களை இயக்க முடியாமல் போகலாம் என ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள இயந்திரங்களுக்கு தேவையான எண்ணெய் இன்னும் இரண்டு மாதங்களுக்கு மாத்திரமே போதுமானது என மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இயந்திர எண்ணெய் இறக்குமதிக்கான கடன் கடிதங்களை திறக்க டொலர்கள் இல்லை எனவும் ரயில்வேத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தச் சூழ்நிலையில், தற்போது இயக்கப்படும் ரயில்களில் ஒரு பகுதி சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இயந்திரங்களுக்கு தேவையான எண்ணெய் இந்தியா மற்றும் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

இதேவேளை, தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக ரயில்களில் பயணிப் போரின் எண்ணிக்கை சடுதி யாக அதிகரித்துள்ளது.

இதன்காரணமாக ரயில் நிலையங்கள் பொதுமக்களினால் நிரம்பி வழிவதனையும் அவதானிக்க முடிகின்றது. (ம-7)


கோப்புப் படம்


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (11889)

076 825 7716 (ஆகாஸ்)

**வீடு தேவை**

நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலி மற்றும் கச்சேரி நல்லூர் வீதி ஆகிய இடங்களில் வீடு விற்பனைக்கு வேண்டும்.
வீட்டின் உரிமையாளர் மட்டும் தொடர்பு கொள்ளவும். (11895)

**076 801 5646**

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு
A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-4410)
எமது கிளைகள்
● பயிற்சிக்கால ஊக்கத்தொகை - 20,000/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
● வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்.
0777-068-777

**உடனடி வேலை வாய்ப்பு**
யாழ் நகரப்பகுதியில் உள்ள நிறுவனத்தில் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு வேலைக்கு ஆள் தேவை (C-4410)
சம்பளம் - 30'000/-
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777



**8ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 15 - 04 - 1947
மறைவு 17 - 06 - 2014

**அமரர் சிற்றம்பலம் சின்னத்தம்பி**
(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை)
திதி: 18.06.2022

வசந்த கால்ங்கள் வாடி ஒழிந்துவிட
நிசப்தமணித்துளிகள் நீண்டுவளர்ந்துவிட
தவித்த தருணங்கள் தணலாய் நீறெடுக்க
நாவிரண்டு வருடங்கள் நாங்களிங்கே நீங்களின்றி...
நிலம் வியக்க இங்கு நிறை வாழ்வு வாழ்ந்தவரே
ஆண்டுகள் நீண்டாலும் ஆறாது எம் துயரம்
இந்த நிலம் இருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்

வரணி (11898) நினைவுடன்: குடும்பத்தினர்



**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 10 பரப்பு காணி விற்பனைக்கு

- A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி 100 m தூரம்
- கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100 m தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- நன்னீரூற்று.
- கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 m தூரம்
- மூன்று வழிப் பாதை மேட்டுநிலம்
- கைதடி சந்தி 500 m தூரம்
- 2 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்

(11900)

பார்வையிடும் நேரம்
காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

ஒரு பரப்பின் விலை - மூன்று இலட்சம்

தொடர்பு: 076 658 3621, 076 436 5814


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.